தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 60 மலர் : 4

உள்ளுறை

1. ஐந்திறம் (ஒரு கண்ணோட்டம்) 145

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

2. கதையாசிரியர்களும் உத்திகளும் 160

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் இரா. சண்முகவேலன்
தமிழ்த்துறை,
அ. வி. வா. நி. புட்பங் கல்லூரி,
பூண்டி.

3. இந்தியால் வரும் கேடு 170

முனைவர் சாலை இளந்திரையன்
பேரவை இல்லம்,
11, திருவீயான் தெரு,
கோபாலபுரம்,
சென்னை - 86.

4. தாலாட்டு இலக்கியம் காட்டும் இலக்கியக் கொள்கை 174

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
த. அழகப்பரசு
இளநிலை ஆய்வாளர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

5. தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை 177

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2017

துணர்: 60 அட்சய — ஆடி மலர்: 4

ஜூலை — ஆகஸ்ட் 1986

ஐந்திறம் (ஒருகண்ணோட்டம்)

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

" மாண்புமிகு தமிழக முதல்வர் பொன் மனச் செம்மல் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் மதுரையில் உலகத்தமிழ்ச்சங்கம் நிறுவிய பொன்னான நாளில் சிறப்பு நிகழ்ச்சியாக 'ஐந்திறம்' என்ற இத்

தொன்னூலை முதன் முதலாகத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு மகிழ்ச்சியோடு சொந்தமாக்குகிறார்கள் '' (ஐந்-அறிமுகம்-பக்-18)

எனத் திரு வை. கணபதி ஸ்தபதி அவர்களான் அறிமுகம் செய்யப் பெற்றுள்ள *ஐந்திறம்* என்னும் அழகிய அச்சும் கட்டுக் கோப்பும் அமைந்த நூலினைக் கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வரவர்கள் என்னிடந்தந்து சிறுகுறிப்பொன்று எழுதித்தரப் பணித்தார்கள்.

தொல்காப்பியத்திற்குப் பாயிரம் வரைந்த பனம்பாரனார் தொல்காப்பியனாரை '*ஐந்திரம்* நிறைந்த *தொல்காப்பியன்*' என அறிமுகப்படுத்துகின்றார். ஐந்திரம் என்பதற்கு உரையாளர் யாவரும் இந்திரனாற் செய்யப்பெற்றதொருநூல் என விளக்கங் கூறி யுள்ளனர். அந்நூல் பற்றி ஆய்வாளர் சிலபல கருத்துக்களைக் கூறி வருகின்றனர். ஓரிருவர் ஐந்திரம் என்பது 'ஐந்திறம்' என இருத்தல் வேண்டும் அதன் பொருள் 'எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து கூறுபட்ட இலக்கண அறிவான் நிறைந்த' என்பதாகும்.எனக்கூறியுள்ளனர். ஐந்திறம் என்பது ஒரு நூலன்று என்பது அவர் கருத்து.

'திறம்' என்னும் சொல் இலக்கணம் என்னும் பொருளில் வருமாறில்லை எனவும், தமிழிலக்கணத்தை ஐந்து கூறுகளாகக் கூறுதல் இடைக்காலத்துத் தோன்றிய மரபு எனவும், இறையனார் களவியல் உரையிலும் எழுத்து, சொல், பொருள், யாப்பு என்னும் நான்கு கூறுகளாக வகுத்துக்கொண்ட நிலையே காணப்படுகின்றது எனவும், தொல்காப்பியர் காலத்து எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று கூறுகளே அமைந்திருந்தமை"எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி'' எனவரும் பாயிரத்தால் அறியலாம் எனவும் காரணங்காட்டி *ஐந்து திறங்கள்* என்னும் கருத்தினை மறுப்பார் பலர்.

தமிழக அரசின் மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் இந் நூலுக்கு அளித்துள்ள அணிந்துரையுள் ''தமிழிலக்கண நூலான தொல்காப்பியத்தில் அந்நூலாசிரியர் தன் நூலுக்கு அடிப்படையான தொன்னூலொன்றைக் குறிப்பிடுகின்றார். அந்நூல் 'ஐந்திரம்' என்று அங்கே கூறப்படுகிறது. *ஐந்திரம் நிறைந்த தொல் காப்பியம்* என்பது அந்நூலில் காணப்படும் சொற்றொடர்''. [இதுகாறும் உள்ள பதிப்புகளில் தொல்*காப்பியன்* என்றே உளது] என வரைந்துள்ளார்கள் (அணிந்துரை பக் - 1)

இதுவரை வந்துள்ள தொல்காப்பியப் பதிப்புக்களுள் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்னும் தொடர் பனம்பாரனார்

பாயிரத்தில் மட்டுமே காணப்படுகின்றது. நூலுள் காணப்பெற வில்லை. ஆனால் கல்வியமைச்சரவர்கள்

"ஐந்திறம் ஓர் இலக்கணநூல், மொழி இலக்கணமாக முதலில் தொடங்கி அங்கே பல்கலை இலக்கணங்கள் விரிவாகப் பேசப்படு கின்றன" என எழுதியுள்ளார்கள்.

ஐந்திரம், ஐந்திறம் என்பவை வேறுவேரு அல்லது ஒன்ரு என்பது பற்றி அவர்களின் கருத்தை விளங்கிக்கொள்ள இயலவில்லை,

இனி அறிமுகம் எழுதியுள்ள ஸ்தபதியார் அவர்கள் "மயன் இயற்றிய ஐந்திறம் என்ற இந்த இலக்கண நூலில் மொழி இலக்கணம் மட்டுமில்லாமல் ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக் கலை, இசைக்கலை ஆகிய நுண்கலைகளின் இலக்கணங்களும் அவற்றைச் சார்ந்த அறிவியல் நுட்பங்களும் பெருமளவில் வருகின்றன. எனவேதான் தொல்காப்பியர் அவற்றை முழுமையாகக் கொண்டிடாமல் மொழி இலக்கணத்தை மட்டும் பிரித்தெடுத்துத் தன்னுடைய இலக்கணநூலை 'ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம்' எனக் கூறிக் கொண்டாரோ என நினைக்க வேண்டியிருக்கிறது. (அறிமுகம் - பக்-18) எனக் கூறுதலான் அவர்க்குப் பாயிரத்தில் வரும் ஐந்திரம் என்பது ஐந்திறமே என்பதும் அத்தொடர் தொல் காப்பியருடையதே என்பதும் கருத்தாதல் புலப்படுகின்றது.

இந்நூலின் தலைப்புப் பக்கத்தில் நூலாசிரியர் பழந்தமிழ்ச்சிற்பி மயன் என்றுளது. இறுதி நூற்பாவில் மயத்தமிழ்ச்சிற்பி என்று காணப்படுகிறது.

மயன் தமிழ்க்குடிமகன் மரபுச்சிற்பியர் வழித்தோன்றியவன், தந்தையின் பெயர் தாமரை. தாயின் பெயர் கருங்குழலி. தமிழர் வளர்த்த நுண்கலைகளுக்குத் தந்தையுமானவன் (அறிமுகம் - பக்-12) என அறிமுகத்தில் கூறப்பட்டுள்ளது

மயன் என்பது தமிழ்ச்சொல் எனக் கொள்ளுதற்குரிய உரிச் சொல்லடியாதென்பது விளங்கவில்லை. தாமரை என்பது ஆண்பாற்பெயராகவும் வழங்கப்படுதலை இங்கே காண முடிகின்றது.

கருமாரிதாசர் என்றுபுகழ்பெற்ற புலவர் வீரபத்திரனார் ஆவர். பத்துலட்சம் தமிழ்ப் பாடல்களை மனனம் செய்து வைத்திருப்பதில் இரண்டரை லட்சம் பாடல்கள் ஒலிப்பதிவாகியும் ஒருசில தட்டச்சுச் செய்திருக்கும் நிலையிலும் உள" (அணிந்துரை - பக் - 3)

எனக்கல்வியமைச்சர் கூறியுள்ளார். வணக்கத்திற்குரிய கருமாரிதாசரவர்கள் இந்நூலைக் கையெழுத்துப் படியாக வைத்திருந்தனரா, சுவடியாகவே வைத்திருந்தனரா என்னும் வினாத் தோன்றாவண்ணம்,

“கலைநூல்களோடு அவர் மனப்பாடம் செய்து வைத்திருந்த தொல்பழந்தமிழிலக்கண நூலாகிய ஐந்திறம் என்ற நூல் அவர்தம் கையால் எழுதப்பெற்று அச்சேறி இன்று நம்மிடையே முதுபெருந் தமிழ் நூலாகத் தமிழக அரசால் வழங்கப்படுகிறது. (அறிமுகம் - பக்-15, 16) என்னும் அறிமுகவுரை இந்நூல் புலவர் வீரபத்திரனார் அவர்களின் நினைவிலிருந்து அவரால் கைப்பட எழுதித்தரப் பெற்றது எனத் தெளிவு படுத்துகிறது.

அவர் இந்நூலை எங்குப் பெற்றார் எவ்வாறு மனனம் செய்தார் என்றெல்லாம் நாம் குழம்பாத வண்ணம் இந்நூலை அவர் நினைவில் தேக்கி வைத்திருக்கும் வரலாற்றினை அறிமுகவுரை பின்வருமாறு புலப்படுத்துகின்றது.

“புலவர் வீரபத்திரனார் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் (1961 க்கு முன்) தஞ்சாவூர் சரபோசி மன்னர் பாதுகாத்து வைத்திருந்த நூல் நிலையத்தில் நான்காண்டு காலந் தங்கியிருந்து அந் நூல்களையே மனப்பாடம் செய்து விட்டார் .. .. நான்காண்டு காலத்தில் பத்துலட்சம் பாடல்களை மனனம் செய்து வைத்துக் கொண்டார். அவர் தம் நினைவாற்றல்தான் எத்தனை வலுவானது” (அறிமுகம் - பக் — 16)

இவ்வரலாற்றான் சரபோசி மன்னர் நூல் நிலையத்தில் இப் பெருமகனார் மனனஞ் செய்த பத்துலட்சம் பாடல்கள் வரையப் பெற்ற சுவடிகள் இருந்துள்ளன எனத் தெரிகின்றது. சரபோசி மன்னர் நூல் நிலையம் என்பது சரசுவதி மகால் நூலகமே எனக் கொள்ளலாம்.

சரசுவதி மகால் நூலகம் இன்றைக்கு ஐம்பது ஆண்டுகட்கு முன்பே ஒழுங்குபடுத்தப் பெற்று அங்குள்ள சுவடிகளும் பிறபொருள்களும் கையெழுத்துப்படிகளும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பேரறிஞர் L. உலகநாதபிள்ளையவர்கள் தமிழ்மொழியில் அமைந்த சுவடிகளைஎல்லாம் ஆராய்ந்து தொகுத்து வகைப் படுத்தி அட்டவணை செய்து தந்துள்ளார். அட்டவணைகள் அச்சாகி உள்ளன அவையே இன்றைக்கும் கையேடுகளாகப்

பயன்பட்டு வருகின்றன. இப் புலவர் பெருமகனார் மனனஞ் செய்த நூல்கள் அவ் அட்டவணையில் இருப்பின் இவரை வாய்மொழியாற் சொல்லச் செய்து நாடாப் பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிராது. எனவே சரசுவதி மகால் நூலகத்தில் அவ் ஏடுகள் இன்றைக்கு இல்லை என்று தெரிகிறது. ஒருகால் சரபோசி மன்னர் பாதுகாத்து வைத்திருந்த நூல் நிலையம் வேறாக இருக்குமோ ? அப்படியும் கருதுவதற்கில்லை. இக் குழப்பம் பின் வரும் அறிமுக உரையால் ஓரளவு நீங்குகின்றது. அஃதாவது,

''தஞ்சை நூல் நிலையத்தில் கட்டி ஒதுங்கிக் கிடந்த பழஞ்சுவடிகளை விரித்துப் பார்த்தார். எதுகை மோனை இனிய ஓசை நிரம்பிய தமிழ்ப் பாடல்கள் அவர் மனத்தை ஈர்த்தன. இனிய தமிழோசையில் தன்னை இழந்திட்ட புலவர் வீரபத்திரனார் நான்காண்டுக்காலத்தில் பத்து லட்சம் பாடல்களை மனனம் செய்து கொண்டார்'' (அறிமுகம் - பக் - 16)

மேற்கூறிய குறிப்பைக் கொண்டு புலவர் அவர்கள் மனைஞ் செய்த சுவடிகள் யாவும் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் குப்பையாகக் கிடந்திருத்தல் வேண்டுமெனத் தெரிகின்றது. பத்துலட்சம் பாடல்கள் என்னும் போது அவை எழுதப்பட்ட சுவடிக் கட்டுகள் நூற்றுக்கு மேற்பட்டிருக்க வேண்டும். மேலும் மயத்தமிழ்ச் சிற்பியால் இயற்றப் பெற்று இப் புலவர் பெருமகனாரால் மனைஞ் செய்யப் பெற்றுள்ளனவாக அறிமுகத்தில் பின்வரும் நூல்கள் கூறப்பட்டுள்ளன.

(1)	ஓவியச் செந்நூல்	(7)	வாணியற் செந்நூல்
(2)	சிற்பமாச் செந்நூல்	(8)	மரக்கலச் செந்நூல்
(3)	கட்டடச் செந்நூல்	(9)	விண்கலச் செந்நூல்
(4)	மனைநிலச் செந்நூல்	(10)	பெருநடச் செந்நூல்
(5)	நிலமனைச் செந்நூல்	(11)	ஏழிசைச் செந்நூல்
(6)	கணிதமாச் செந்நூல்	(12)	தமிழியற் செந்நூல்

இவற்றுள் யாதொன்றும் அட்டவணையில் குறிக்கப் பெறாமை வியப்பாக உளது. உலகநாத பிள்ளை அவற்றை அறியாமற் போனது வருந்தற்குரியது.

அங்ஙனம் பேணுவாரற்று ஒதுங்கிக்கிடந்த அந்நூல்களைக் கண்டு அவையாவும் ஒப்பற்ற கலை இலக்கணங்களாக இருந்தமையை நோக்கி முறையாகப் படித்து மனனஞ் செய்த பெருமகனார் அவற்றை அந்நூலகத்திற் சேர்க்காமல் இருந்தமைக்குக் காரணம் புலப்படவில்லை அவற்றை நான்காண்டுகள் தங்கிப்

படித்து மனனஞ் செய்துள்ளார். பின்னராவது அவற்றை நூலகத்திற் சேர்த்திருக்கலாம். ஒருகால் அவர்கள் அவற்றைப் பேணிக்காக்க மாட்டார்கள் எனக்கருதினார் போலும். அவ்வாறாயின் கிடைத்தற் கரிய அந்நூற் சுவடிகளைத் தாமாவது பாதுகாத்து வைத்திருத்தல் வேண்டும். அதுபற்றி ஒன்றும் அறியக்கூடவில்லை.

பதினைந்து ஆண்டுகட்கு முன்னர் அவரோடு தொடர்பு கொண்ட ஸ்தபதியாரவர்கள் சுவடிகளைப் பற்றி உசரவி அறிந் திருக்கலாம். புலவரவர்களும் தம் நினைவாற்றலை நம்பி அவற்றைப் பேணாது விட்டனர் போலும். கல்வியமைச்சர் அவர்களும் அது பற்றிச் சிந்திக்கவில்லை எனத் தெரிகிறது. எவ்வாறாயினும் அச்சுவடிகளை இழந்தது நமக்குப் பேரிழப்பாகும்.

சரசுவதிமகால் நூலகம் விடுமுறைநாட்கள் போக ஓராண்டுள் 280 நாள் முதல் 300 நாள் வரை திறந்திருக்கும். புலவரவர்கள் நான்காண்டுகள் தங்கி அந்நூல்களை மனனம் செய்துள்ளார். குறைந்த அளவு அவர் 1000 நாள் அங்குத் தங்கிப் பயன்றிருத்தல் வேண்டும். அலுவலகம் ஒரு நாளைக்கு ஐந்து மணிநேரம் திறந்திருக்கும். 1000 நாட்களில் 1000000 பாடல்களை நெட்டுருச் செய்தாரெனின் ஒரு நாளைக்கு ஆயிரம் பாடல்களாக மனனஞ்செய்துள்ளார். ஒரு மணிக்கு 200 பாடல்கள் மனனஞ் செய்வதென்பது எம்போல்வாருக்கு இயலாது. அப்படி ஒரு தெய்வீக ஆற்றலை இப்புலவர் பெருமகனார் பெற்றிருக்கிறார் என அறியும் போது அது கருமாரியின் பேரருளாகத் தான் இருத்தல் வேண்டும். அப்பெருமகனார் மிகமிகப் போற்றத்தக்கவர் என்பதில் ஐயமில்லை.

அவர் ஆற்றலையும் அவரிடமிருக்கும் கலைக்கருவூலத்தையும் நன்கறிந்து அரசுக்குத் தெரிவித்து ஆவனபுரிந்து அவர் நினைவில் வைத்துள்ளவற்றுள் ஒரு பகுதியை இற்றைக்கு வெளிக் கொணர்ந்து மற்றவற்றையும் இனி வெளிக்கொணரக் கைம்மாறு கருதாது உழைத்து வரும் ஸ்தபதியாரவர்களும் மிகவும் பாராட்டத்தக்கவரே யாவர்.

"மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் மாமல்லபுரம் வந்து அப் பாடல்களைக் கேட்டு உறுதிகொண்டார்கள். மயன் தமிழின் இனிமையைச் சொல்லிச் சொல்லி இன்புற்றார்கள், மேலும் பல மூதறிஞர்களிடம் கொடுத்துக் கருத்துக் கேட்டார்கள். ஆராய்ச்சி யாளர்களையும் அனுப்பி வைத்து அவர்தம் ஆலோசனைகளையும் கலந்தார்கள்: மாமல்லபுரம் வந்து அந்நூல்களை இறுதியாகப்

படிக்கக்கேட்டு மனநிறைவு கொண்டார்கள். [இவ்வளவு செய்த அமைச்சரவர்கள் மூலநூல்கள் என்னவாயின என்று தெரிந்து கொள்ள முயலாதது பெரும் வியப்பாக உள்ளது] ஐந்திறம் என்ற தமிழ் இலக்கணநூலை முதலில் எழுதித் தரவேண்டுமென்று அப் புலவர் பெருமகனாரிடம் விருப்பமும் தெரிவித்தார்கள்'' (அறிமுகம் பக்-17)

என்னும் போது அமைச்சரவர்களின் இலக்கணப்பற்றும் தமிழ் வளர்ச்சியில் அவருக்குள்ள பேரரர்வமும் புலனாகின்றன.

அமைச்சரவர்களாற் கருத்துக் கேட்கப்பெற்ற மூதறிஞர்கள் ஆராய்ச்சியாளர்களின் பெயர்கள் அறிமுக உரையில் குறிக்கப் பெறாவிடினும் அவர்களுள் பெரும்பாலோர் தமிழகத்தில் உள்ள பேராசிரியர்களும் ஆய்வாளர்களுமாக இருந்திருப்பார்கள். விரைந்து அச்சிடவேண்டி இருந்தமையான் அவர்களின் கருத்துக்களை நூலோடு வெளியிடவில்லை எனக்கருதவேண்டியுளது.

[நூலை வரைந்துதவிய கருமாரிதாசர் ஒரு சிறு முகவுரை தந்திருக் கலாம். அவர் தாராமற்போனதற்குக் காரணம் தெரியவில்லை.]

இந்நூலை வெளிக்கொணரும் பொறுப்பினைத் தமிழ்வளர்ச்சிக் கழகத்தாரிடமோ, பல்கலைக்கழகத் தமிழ்த்துறையாளரிடமோ தராமல் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தினரிடம் ஒப்பித்திருப் பதற்கும் அதுவே காணமாக இருக்கும்போலும். எப்படியிருப்பினும் பெரிதும் பிழைகளின்றி மிக அழகிய பதிப்பாக வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது.

நூல்

முந்நூறு பக்கங்களுக்கு மேல் உள்ள இந்நூல் பத்தே நாளில் அச்சிடப்பெற்று உறுதியான கட்டமைப்போடு அழகிய மேலுறை யோடு அமைந்து தமிழ் வளர்ச்சியையே தன் மூச்சாகக் கொண் டுள்ள மாண்பு மிகு தமிழக முதல்வரால் வெளியிடப்பெற்றுள்ளது.

இதன் கண் 892 நூற்பாக்கள் உள்ளன. அவையாவும் இயற்பிரிவோ அதிகாரப்பிரிவோ இன்றித் தொடர்ச்சியாக அமைந் துள்ளன. நூற்பாக்கள் ஓரடி முதல் அறுபத்து நான்கு அடிகள் வரை அளவுற்றமைந்துள்ளன. ஏறத்தாழ 8500 அடிகள் உள.

இரண்டும் அதற்கு மேற்பட்டும் உள்ள அடிகளைக்கொண்ட நூற்பாக்கள் யாவும் எதுகைத் தொடையோடு விளங்குகின்றன. மோனைத்தொடை பெற்றுத்திகழும் நூற்பாக்கள் பலவுள. மற்றும்

இணை மோனை, இணை எதுகை முதலாய விகற்பத்தொடைகளும் குறைவின்றி அமைந்துள்ளன. யாவும் அகவலோசையமைந்த ஆசிரியநடையில் ஒழுகுவண்ணத்தொடு திகழ்கின்றன.

"இந்நூல் தோன்றிச் சுமார் 8000 ஆண்டுகளாகிறது" (அறிமுகம் பக்-13) என்பதனால் இது தொல்காப்பியத்திற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முற்பட்டதாகின்றது. அதனான், தொல்காப்பியம் செய்யுளியலுள்ளும் மரபியலுள்ளும் கூறும் நூலிலக்கண விதிகளும் சூத்திர இலக்கண விதிகளும் இந் நூலுக்கும் சூத்திரங்களுக்கும் பொருந்தி வரவில்லை எனக் கருத வேண்டியுளது.

இலக்கணம் என்பது சான்றோரால் செய்யப் பட்டுள்ள இலக்கியங்களையும் உயர்ந்தோர் வழக்குகளையும் அடிப்படையாகக் கொண்டு இனிச் செய்யப்படும் இலக்கியங்களைப் பற்றிய வரையறைகளை விதி முறையாகக் கூறுவதாகும். அவ்வாற்றான் இலக்கண நூல் விதிக்கப்படுவதும் விதியுமாகக் கூறப்படும். கூறுங்கால் அவற்றைக் கருவியும் செய்கையுமாகப் பகுத்துக் கொண்டு கூறும். மேலும் ஒரு பொருளை பற்றிய பல விதிகளை ஒரு சூத்திரமாகக் கூறும்.ஒரு சூத்திரத்துள் பல பொருளைப் பற்றிக் கூறுவதில்லை. அங்ஙனம் கூறின் குற்றம் என்ப. வடநூலார் அக் குற்றத்தை வாக்கியபேதம் என்பார்.

இந் நூலுள் ஒருசில நூற்பாக்களைத் தவிர பிற யாவும் அம் முறையில் அமையவில்லை. மயனார் காலத்தில் இவ்வாறான கட்டுப்பாடுகள் இல்லைபோலும்.

இனி ஐந்திறம் என்பதற்கு எழுத்து, சொல், பொருள் கட்டு (யாப்பு) அணி எனப் பொருள் விளக்கந்தரும் இந்நூல், அவற்றை முறையாகக் கூறாமல் ஆங்காங்கே ஓரிரு இடங்களில் தனியாகவும் பல இடங்களில் வேறு பொருள் விளக்கங்களின் ஊடாகவும் கூறுகின்றது. மேலும் ஐந்திறம் என்பதற்கு வேறு வேறு விளக்கங்களும் கூறுகின்றது.

ஏறத்தாழ 8500 அடிகளைக் கொண்ட இந்நூலுள் எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி என்னும் மொழி இலக்கணக் கருத்துக்கள் ஏறக்குறைய நூறு வரிக்குள் அடங்குமாறு அமைந்துள்ளன. அக்கருத்துக்களும் அசை, சீர், பா, அடி, தொடை, இசை, ஓசை என்னும் குறியீட்டுச் சொற்களாகக் அமைந்துள்ளனவேயன்றி இஃது இன்னது இஃது இவ்வாறு வரும்

என்றாற் போல விதி முறையாகக் கூறப்படவில்லை. பிற கலைகளும் வண்ணனைகளாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன.

இந்நூலுள் கூறப்பட்டுள்ள மொழி இலக்கணக் கருத்துக்களைக் கொண்டு தொல்காப்பியர் மொழியலாரும் இலக்கியப் பேரறிஞர்களும் பாராட்டத் தக்கதொரு நூலைச் செய்து கொடுத்துள்ளமையைக் காணும்போது 'ஐந்திறம்' என்னும் இந் நூல் அலாவுதீன் அற்புத விளக்கைக் காட்டிலும் பேரற்புதமான தொரு தெய்விகத் தன்மையுடைய நூல் என உறுதியாகச் சொல்லலாம்.

இனி இந்நூல் நுதலிய பொருள் இவை எனப் பல நூற்பாக்கள் கூறுகின்றன.

''எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்து மைந்தியல் முறைநெறி வழக்கே'' (நூ-9)

காலமும் இடமும் கருத்துற நோக்கி
மூலமும் ஒளியும் முயன்றி னிதாய்ந்தே
ஞாலமும் விண்ணும் நவையற நோக்கிக்
கோலத் தமிழியல் குறிக்குமிந் நூலே (நூ-32)

இவை எடுத்துக்காட்டு. இன்னும் 42, 43, 108, 109 நூற்பாக்கள் முதலாக மேலும் கண்டுகொள்க.

பல நூற்பாக்கள் இந்நூற் பொருளை அறிதற்கும் தெளிதற்கும் பயிலற்கும் உரியார்தம் தகுதிகள் இவை என விளம்புகின்றன. எடுத்துக் காட்டாக.

ஒளிறெி யாற்றலால் உளத்திய லாய்ந்து
வெளிநெறிக் கலைநெறிச் செந்நெறி உணர்ந்தோர்
தெளிகலை ஆற்றல் செந்நெறி உணர்வால்
ஒளித்தமிழ் ஐந்தியல் ஓர்ந்துணர்வாரே (நூ-34)

முந்து செந்தமிழை முறைநெறி ஆய்ந்து
வந்த தொல்கலை மரபினி துணர்ந்து
ஐந்தவி யாற்றலால் அகவுணர் வுற்றே
ஐந்தியல் தமிழிந் நூலுணர்வாரே (நூ.35)

மூவகைக் குற்றமும் முறை மையின் தவிர்த்தே
ஆவலால் கற்போர் ஐந்தியல் அறிவரே (நூ. 39)

இறுதிவரை இடையிடையே இவ்வாறு பல நூற்பாக்கள் உள. நூலைப்பயிலும் முறைபற்றிச் சில நூற்பாக்கள் அறைகின்றன.

ஓர் எடுத்துக்காட்டு :-

எழுநிலை எண்கலை ஐந்தியல் அறுவகை
பழுதற உணரின் செழும்பொருள் நெறியே
எழுத்து சொற்பொருள் கட்டணி ஐந்தும்
வழுத்து மாப்பொருள் மெய்க்கலை உணர்ந்தே
ஐந்தியல் நெறிக்கலை மெய் யுற்றுணர்ந்தே
செந்தமிழ்ச் சிற்பம் ஓவியங்காண்டல்
மூந்துறுந் தொன்மரபியல் நெறியியலே (நூ.54)

பின்வரும் நூற்பா இந்நூலைச் செய்தகாரணம் கூறுகின்றது.

ஒளிமுதற் கண்ட விண் தமிழ் ஓசை
வெளிவளர் ஓம் என விளம்பல் கேட்டே
தெளிதமிழ் மொழியியல் ஐந்தியல் வரம்பாய்
ஒளிவளர் ஐந்திறம் உரைத்தனன் நன்றே (நூ. 45)

இந்நூலை விளம்பிய முறையைப் பின்வரும் நூற்பாக் கூறுகின்றது.

மூவகைக் குற்றமும் முந்நூற நீங்கி
ஐவகைப் பொறிபுலன் இயல்நிலையறிந்தே
செய்வகை மாறாத் திறத்தினனாகி
உய்வகை செய்வினை உஞற்றுபே றறிவால்
முனைவனாகி நூல் விளம்புவனே (நூ - 68)

இங்ஙனம் மேலும் சில நூற்பாக்கள் உள. இவ்வாறான கருத்துக்கள் இடையிடையே கொண்ட நூற்பாக்கள் பலவுள.

இறுதி (892) நூற்பா இந்நூலைக்கேட்டு வேந்தன் மகிழ்ந்த தாகவும் *கழகச்சான்றோர்* புகழ்ந்து வாழ்த்தியதாகவும் ஆடலான் அருளால் மயத்தமிழ்ச் சிற்பி இயற்றியதாகவும் பிறவும் கூறுகின்றது அந்நூற்பா வருமாறு :-

செந்தமிழ் ஐந்திறச் சீர்சால் செந்நெறி
முந்துறுங் கலைநெறித் தீந்தமிழ்ச் சிற்றவை
எண்ணியற் கலையுணர்வியல் நெறித் திறனால்
எண்கலைத் திறனெறி விண்கலை மொழியியல்
ஒளித்தமிழ்க் குறிநிலை வெளித் தமிழ் நெறிநிலை
ஒளிவெளி நுட்பம் ஓங்குறும் மதியுணர்
திறனெறிச் சீர்மைத் திருநிலைத் திறத்தால்
அறமுறும் அவையோர் அகமகிழ்வுணர்வால்
வாழ்த்துறும் மொழியால் வேந்தன் மகிழ்ந்தே
வாழ்த்துறும் உரைமொழி வளமுறக் கேட்டே

அழகுறுந் தீந்தமிழ்க் கழகச் சான்றோர்
பழகு மாத்தமிழ்ப் பேருரை புகழ
அவைக் களங்கண்டே அகமகிழ்ந்தின்பால்
நவையறுஞ்சிற்ப நற்றமிழ் ஓவியம்
ஐந்திற நூற்பா முந்துறுந் திறத்தால்
வந்த செந்தமிழ் ஒளி ஆடலான் அருளால்
அக மகிழ்ந்தின்புற் றைம்புலத் தொன்றி
மிகுமொளி யுணர்வால் பன்னிரு செந்நூல்
மூலவைந் தியலால் முறைமையிற் றெரிந்தே
கால மியக்கும் ஆடலான் அருளால்
ஐந்தியற் செந்தமிழ் அழகுற வியற்றினன்
செந்தமிழ்ச் சான்றோர் சீரவை சேர்ந்தே
ஏட்டெழுத் தியற்றமிழ் ஐந்திறம் அளித்தனன்
நாட்டுணர் வோங்கும் நறுந்தமிழுணர்வால்
இருகை குவித்தே இன்புற் றளித்தனன்
திருவுறும் ஆடலான் அருள் நிலை சிறந்தே
ஆன்றவிந்தடங்கும் அருந்தமிழ்ச் சான்றோர்
ஏன்றுள மகிழ்ந்து வாழ்த்துவீர் நன்றே
அயல் நெறிச் சாராத் தமிழொளி யுணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே (நூ. 892)

இந் நூற்பா மயனார் இயற்றியதா அல்லது அவர் மாணாக்கர் இயற்றியதா என்பது முடிவு செய்ய முடியவில்லை. கருத்துக்களை நோக்க இது பாயிரம் போலக் காணப்படுகின்றது. ஒருகால் மயனாரே தன்னைப் படர்க்கையில் வைத்துக் கூறியுள்ளாரோ என்னவோ, பேரறிஞர்கள் சீராக நேராக வீராக ஏராக ஒளித்தமிழ் உணர்வால் ஐம்புலனடக்கி ஆராய்ந்து கொள்வாராக.

பல நூற்பாக்களில் எது எழுவாய் எது பற்றி எவ்விதி கூறுகின்றது என்பது எனது சிற்றறிவிற்குப் புலனாக வில்லை. எடுத்துக்காட்டு

எண்கலைத் திறனியல் எட்டெட்டியன்றே
நுண்கலை மூலம் புள்ளித் திறனாய்
ஐயைந் தியலாய் மெய்க்கலை நுணுக்கம்
வைநெறி தெரிந்துணர் திட்பமும் ஓர்ந்தே
ஞாலம் இயலும் நெறி நிலை ஆற்றல்
கோலமா நுட்பம் குறித்தியல் மெய்யே (நூ - 127)

ஒரே கருத்தினைச் சிறுமாற்றமமைந்த பல தொடர்களான் கூறப் பட்டுள்ள நூற்பாக்கள் மிகப்பல எடுத்துக் காட்டாக 127—147 வரையுள்ள வற்றையும் 181—188 வரை உள்ளவற்றையும் காண்க.

பல அடிகளைக் கொண்ட பெரிய நூற்பாக்களில் ஒரே கருத்துச் சில மாற்றமுள்ள தொடர்களான் பலமுறை கூறப்பெற்றுள்ளது.

தலைப்பு ஐந்திறம் என்றிருப்பினும் அறுதிறம் எண்திறம் எட்டெட்டுத்திறம் என்று கருதும் வகையில் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. ஒரே பொருளைப் பற்றிப் பல இடங்களிற் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சில

கணக்கியல் நூற்பா 422, 433, 436 இவை எடுத்துக் காட்டிற்காக் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் பல நூற்பாக்கள் கணக்கியல் பற்றிப் பேசுகின்றன. பின் வருவனவற்றிற்கும் இவ்விளக்கம் ஒக்கும்.

கட்டிடக்கலை : (பெரும்பாலும் வருணனை) நூ. 550 முதல் 558 வரை. 696, 697, 704 முதல் 707 வரை மேலும் பல.

நாட்டியம் : நூ 455, 863 மேலும் சில

அளவை நூ. 876 மேலும் சில சூத்திரங்களுள் சில வரிகள்

அணு (அணுக்கலை) : 486, 873 ,,

தாளம் நூ : 600 ,,

ஓவியம் நூ : 616, 708, 718 ,,

சிற்பம் நூ : 709 ,,

தண்டமிழ் ஐந்தியல் நூ 566 ,,

மற்றும் குடிமக்கள், அமைச்சியல், அரசியல் மனையியல், நிலவியல், வளிநிலை, கோள்நிலை முதலிய பல பொருள்கள் சுட்டப்பட்டுள்ளன.

எண்ணென்கலை, எட்டெட்டியல், எண்முறைநிலை எண் வகையியல் ஐந்தியல், முதலிய தொடர்மொழிகள் பல இடங்களில் மீண்டும் மீண்டும் வருகின்றன. செந்தமிழ், வண்டமிழ் ஒளித்தமிழ் விண்டமிழ் என்பனவும் விண்கலை, நூண்கலை ஒளி, ஓலி, ஓம் அணு, சிலம், கோலம் புள்ளி, இடம், காலம் ஆகிய சொற்களும் அவையமைந்த சொற்றொடர்களும் பலப்பல இடங்களில் வந்துள்ளன.

இந்நாலை மேலோட்டமாகப் பார்க்கும் மாணவர்கள் கூறியது கூறல், குன்றக்கூறல், மிகைபடக்கூறல், பொருளில கூறல், மயங்கக் கூறல் தன்னுன் ஒருபொருள் கருதிக் கூறல், என்ன வகையினும் மனங்கோளின்மை என்னும் சிதைவுகளுக்கு இந்நூலுள் வரும் பல நூற்பாக்களை எடுத்துக்காட்டி விளக்குவார்களாயின் மறுத்துரைப்பது எம்போல் வார்க்கு எளிதன்று.

இந்நூலுக்குப் பலகலைகளையும் தேர்ந்து உணர்ந்த பேரறிவுடையபெருமக்கள், அஃதாவது தெய்வீகப் புலமையுடைய ஆசான்மார்கள் தோன்றி விரிவாக உரையெழுதிக் காட்டும் வரை எம்போல்வார் இந்நூற் கருத்துக்களை உணர்ந்து தெளிதல் என்பது மிகமிக அரிதாகும்.

மற்று இது கலைவிளக்கநூலா, இலக்கணநூலா, நீதிநூலா, அறநூலா, ஆன்மநெறி, போகநெறி விளக்கநூலா, தத்துவநூலா என வரைந்து கூற இயலாது. எல்லாம் கலந்து நுண்மையாக அமைந்துள்ள தொரு பெருநூலாக உள்ளது.

இனித் தொல்காப்பியம் சங்க இலக்கியம் போன்றவற்றில் பயின்று வராத கணிதம், சிரம், சிற்பம், சீலம், கோளம், அண்டம் பிண்டம் முதலிய சொற்கள் இதன்கண் பயின்று வருகின்றன. இவற்றை வடசொற்கள் என்று இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் ஒரு கால் இவை 8000 ஆண்டுக்கு முற்பட்ட சொற்களாக்இருக்கலாம். இவற்றின் வேராகிய உரிச்சொல்லடிகள் புலப்படவில்லை. மற்றும் களைப்பு என்னும் பொருள்பட

உழைப்போர் உணர்வின் உள்ளொளித் றனாய்

கழைப்பைத் தவிர்த்தே (நூ - 46)

எனக் கழைப்பு என்னும் சொல்லும் வேட்கை என்னும் பொருள்பட

ஆவலால் உணர்வோர் அண்டத்தியலை

கண்டு தெளியும் கலையின் ஆவலாய் (நூ-696) என ஆவல் என்னும் சொல்லும் இதன் கண் காணப்படுகின்றன.

மற்றும் இவ் இருபதாம் நூற்றாண்டு எழுத்தாளர்களான் ஆக்க முற்றனவாகக் கூறப்படும் மொழியியல், ஒலியியல், ஒளியியல், அறிவியல், ஈர்ப்பியல் போன்ற சொற்கள் விரவி நிற்றலை நோக்கும் போது மயத்தமிழ்ச்சிற்பியின் நெடுநோக்கு வியத்தற்குரியதாக உளது. சீர்மை (ஒழுங்கு) என்ற சொல் அண்மைக் காலத்திற்றான் ஆக்கமுற்றுப்பயின்று வருகின்றது என்றுகூற முடியாமல் 8000

ஆண்டுகட்கு முற்பட்ட இந்நூலுள் காணப்படுகின்றது. இவை போல்வன இடைக்காலத்தில் வழங்கப்படாமை வியப்பிற்குரிய தாகும்.

தொல்காப்பியம் முதலாய இலக்கணநூல்களுள் நுதலுதல் (கருதுதல்) நுவலுதல் (சொல்லுதல்) என்னும் சொற்கள் வெவ்வேறு பொருளினவாக வழங்கப்படுகின்றன. இந்நூலாசிரியர்.

நுதலிப்புகுதல் நுவல்வோன் திறனே (நூ. 373) எனக் கூறிப் பின்னர் அவ்விரு சொற்களும் ஒருபொருட்கிளவி எனக் கூறுகின்றார். அதற்கா ஒரு நூற்பாவே செய்துள்ளார். அது நுவலல் நுதலல் ஒரு பொருட்கிளவி (நூ. 374) என்பதாகும். இது நகைச் சுவையாகக் கூறப்பட்டதன்று. இவை எல்லாம் ஆராய்ச்சி யாளர்க்குப் பெருவிருந்தாகும்.

மேலும் மிகமிக வியப்பிற்குரிய ஒரு செய்தி இவ்இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழிக்கு ஏற்பட்டுள்ள அரசியற்சூழல்கள் இந்த ஐந்திறம் நூல் படைக்கப்பெற்ற காலத்திலும் இருந்துள்ளமை புலனாகின்றது. என்னையெனின் தமிழ்மொழியின் சிறப்பையும் அதன் தொன்மையையும் தனித்தன்மையையும் முன்மையையும், நாட்டுப்பற்றினையும்மொழிப்பற்றினையும் இந்நூல் பல இடங்களில் வற்புறுத்திக் கூறுதலான் என்க. அவற்றுள் சில வருமாறு.

ஐந்தியல் மொழியாய் எண்ணிலை எழுத்தாய்
வந்த தொல்மரபே முந்து செந்தமிழாம் (நூ-10)

தென்மொழி தென்சொல் தென்புலம் தென்னிலம்
தென்கலை யியலாய் மக்கள் மொழியும்
நன்மொழி செந்தமிழ் வீண்தமிழ் ஒலியாய்
தென்மொழி முதன்மொழி சாற்றல் நெறியே (நூ-223)

''தண்டமிழ்ச் சொற்பொருள் கலைமொழித் திறனாய்
ஒண்டமிழ் ஐந்திறம் உரைத்தனன் நன்றே'' (நூ-227)

சிற்பம் ஓவியம் கணக்கியல் வரைவியல்
உற்றறி விண்ணெறி காலமா வியலும்
தெற்றுற விளக்கிச் சீர்சால் நுட்பம்
பெற்றுறின் விண்மொழி தொழிற்கலைத் தமிழாய்
விளங்குறுந் தன்மை விளங்கக்கண்டே
வளர்கலை ஐந்தியல் வண்டமிழ் ஆய்வரே (நூ 245)

பெறுந்திற லாற்ற லாற்றெழில் நிலைஇயங்கித்
தொழிற் பெயர் துலங்கும் தொன்மையதாகி
எழிலுறும் மொழியே இன்றமிழ் மொழியாம் (நூ-103)

ஒளிமொழித் தமிழாய் ஓங்கிய இயல்பால்
வெளிநிலை விண்ணளந் தியலுறும் மொழியாய்
தெளிகனலத் தென்தமிழ் தென்புல மொழியாய்
அளியுற விளங்கும் அருந்தமிழ் மொழியே (நூ-106)

''அயல்நெறி சாராத்தமிழ் ஒளி உணர்வால்
மயத்தமிழ்ச் சிற்பி அளித்தனன் மகிழ்ந்தே'' (நூ.892)

இங்ஙனம் தமிழின் சிறப்பை ஆற்றலை இவர் வற்புறுத்துதலை நோக்கும்போது தமிழ்மொழிக்கு எதிராக ஒரு பெருங்குழுவினர் தமிழால் ஒன்றும் ஆகாது அது இந்த மொழியினின்றும் தோன்றியது, உயர்ந்த கலைநூல்களை அதைக்கொண்டு படைக்க இயலாது. எழுத்துக்கள் மிக்குள்ளன என முரண்படக் கூறிப்பல இடையூறு களைச்செய்து கொண்டிருந்தனர் போலும்; எனப்புலப்படுகின்றது. அத்தனையினரை எதிர்த்து எல்லாம் தமிழால் இயலும் என இந் நூலாசிரியர் வற்புறுத்துகின்றார் எனத்தெரிகிறது.

'' நாட்டுணர்வோங்கும் நறுந்தமிழுணர்வால் இருகைகுவித்தே இன்புற்றளிந்தனன்'' (நூ 892) என்பதனால் மயத்தமிழ்ச் சிற்பி யின் நாட்டுப்பற்றும் எல்லையில்லாத மொழிப்பற்றும் புலனாகின்றன.

இன்னும், இந்நூலுக்கு உரையும் விளக்கமும் தோன்றுமானால் மேலும் பல அதிசயிக்கத்தக்க உண்மைகள் வெளிப்படலாம். அறிவாற்றல் நிறைந்த பெருமக்கள் அரசாங்கத்துணையோடு அவற்றைச் செய்தருளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நூற்பொருளை முற்றாக அறிந்துணர்த்தும் ஆற்றலில்லாத என்னைக் குறிப்பெழுதித்தரச் சொல்லிய முதல்வரவர்கள் இனி இது போன்ற பணிகளைக் கொடுத்துத் தண்டிக்காமலிருக்க வேண்டிக்கொள்கிறேன். வணக்கம்.

தமிழ்த்தாயே! நீ வாழ்க!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

பேராசிரியர் **இரா. சண்முகவேலன்**
தமிழ்த் துறை,
அ. வீ. வா. நி. புட்பங் கல்லூரி,
பூண்டி.

ஒரு மதிப்பீடு

இந்திய நாவலாசிரியன் வழக்கமாகவே புதிய கதைப்பின்னல், புதுமையாகக் கதை சொல்லும் பாணி, அல்லது புதுமையான பாத்திரப் படைப்பு ஆகிய உத்திகளில் ஈடுபாடு காட்ட மாட்டான் என்கிற ஒரு கருத்தினை வெளியிடுகிறார் ஓர் அறிஞர்.[21] இது சரியான மதிப்பீடு அன்று நாவல், சிறுகதை ஆகிய இரண்டு இலக்கிய வடிவங்களும் நமக்குச் சொந்தமானவை அல்ல என்று தெரிந்து கொண்டிருக்கிற இந்தியப் புனைகதை எழுத்தாளன் அவன் எந்த இந்திய மொழிக்காரனாக இருந்தாலும்- மேலைப் புலத்தாரின் உத்தி மாதிரிகளை முன் வைத்து இருபதாம் நூற்றாண்டின் முன்னும் பின்னும் புனைகதைகளை எழுத முற்பட்டான் என்பது வரலாற்று உண்மையாகும். இந்திய மொழிகளின் இலக்கிய வரலாறுகளில் இதற்கான சான்று படிவங்கள் இருப்பதை ஆய்வோர் அறிவர். போக, இந்திய நாவலாசிரியர்கள் கலைத் திறன்களில் காட்டும் அக்கறையினையும், மேலை நாட்டினரின் உத்திகளைப் புரிந்துகொண்டு பின்பற்றும் பாங்கினையும் பிறர் பரிந்துரைப்பது[22] மேற்கண்ட தவறான மதிப்பீட்டிற்குத் தகுந்த மறுப்பாகும்.

நாவலுக்குச் சொல்லப்பட்ட ஆசிரியரின் கருத்துக்கள் சிறுகதைக்கும் பொருந்துவனவாகும். தமிழ்ப் புனைகதையாசிரியர்கள் புதிதாம் இவ்விலக்கிய வடிவங்களைத் தம் தாய் மொழியில் அறிமுகம் செய்து வைக்க மாயவரம் ச. வேதநாயகம் பிள்ளை முதல் புதுமைப்பித்தன் வரை பெரிதும் முயன்றனர். ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருந்தால் ஒரு வழியில் மேலை இலக்கியங்களின் பரிச்சயம் இவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது. இது ஒரு சாதகச் சூழல் ஆகும். இன்னொரு நிலையில் உரைநடை எடுத்தடிவைத்துக் கொண்டிருந்த கட்டத்தில், அதில் புனைகதை வடிவைப் புகுத்திப் பார்க்க, கதையாசிரியர்களுக்குச் சோதனை மிக்க காலமாகவும் ஆயிற்று. எனவே உரைநடை செழிந்து வளர்ந்துள்ள இக்காலத்தில் எழுத்தாளர்கள் மேற்கொள்ளும் முயற்சியினும் பார்க்க அந்நாளையக் கதை

யாசிரியர்களின் சாதனை அளப்பரிது. நாவல் இலக்கியத்தில் 19-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியும், சிறுகதை இலக்கியத்தில் 20-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியும் உத்திக்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்ட காலம் என்று துணிந்து கூறலாம்.

உரைநடையைக் கதை இலக்கியத்திற்கு ஏற்றாற் போல் பண்படுத்துவதும், புதிய இலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்து வதும் அக்காலத்துக் கதையாசிரியர்களுக்குக் கட்டாயப் பொறுப் பாகவும், கடமையாகவும், காலச்சுமையாகவும் ஆகிவிட்டன. இத்தகைய சூழலில் அவர்கள் சளைக்காமல் மேலை இலக்கியங் களுடன் தொடர்பு கொண்டு, உத்திகளை அறிந்து அவற்றை யெல்லாம் தாய் மொழியில் கண்டு கொள்ளத் தாங்களாகவே தங்களைச் சோதனை வேள்வியில் இறக்கியதோடு, மகத்தான இலக்கியச் சோதனைகளையும் நிகழ்த்திக் குறுகிய காலத்தில் அடுத்தடுத்து வெற்றிப் படைப்புக்களை யாத்துள்ளனர் என்பது கோடிட்டுக் காட்டவேண்டிய கருத்தாகும்.

> மன அவசத்தின் உருவகம் கதைகள் என்பதை ஒப்புக் கொள்வதானால், அவை கதைகள் ஆகும். இம் மாதிரி யான முறையை அனுஷ்டித்து மேல்நாட்டில் கதைகள் பிரசுரமாவது சகஜம். அந்த முறையை முதல் முதலாகத் தமிழில் இறக்குமதி செய்த பொறுப்பு அல்லது பொறுப்பின்மை என்னுடையதாகும்.[23]

இப்படிக் கூறிக் கொள்வோர் ஒரு சிலராவது இருப்பதால்தான் காலச் சுமைகள் இறக்கப்பட்டு இலக்கிய வலுவை ஏற்ற முடிகின்றது - இலக்கிய வளர்ச்சியைக் காண நேர்கின்றது. அந்நிய மண்ணின் இலக்கியச் சாதனைகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள அதிக வாய்ப்பிருப்பதால் தற்காலத்தில் கை ஈரம் காய்வதற்குள் கதையாசிரியர் கற்றுக் கையாண்டு விடுகின்றனர்.

> கதா பாத்திரங்களோடு அவற்றை உருவாக்குகிற கதையாசிரியனும் சேர்ந்து ஊடாடிக் கதையை வளர்க் கும் இந்தப் புதுமுறையைக் காண்டேகருடைய 'கருகிய மொட்டு' — என்கிற நாவலில் பார்த்திருக்கிறோம். அந்த நாவலின் முன்னுரையில் காண்டேகர் எழுதும் போது இந்தப் புது முறையைத் தாம் வேறு ஓர் ஆங்கில நாவலாசிரியரிடம் இருந்து மேற்கொண்டதாகச் சொல்லுகிறார். தமிழிலும் ஒன்றிரண்டு நாவல்கள் இதே உத்தியில் வெளி வந்திருக்கின்றன. 'பட்டுப்பூச்சி' இந்த உத்தியில் இன்னும் அதிகப் புதுமையைக் கொண்டது.[24]

என்று கதையாசிரியர் கூறுவது ஒரு வரலாற்றை உள்ளடக்கி உள்ளது. ஓர் உத்தியைப் புதிதாய் அறிமுகம் செய்கையில் அதன் தோற்றத்தைத் தொட்டுக் காண்பித்து, அதில் தம் பங்கு என்ன என்பதைக் கதையாசிரியன் அறிவிப்பதை இங்குக் காணலாம். இங்கு இவ்வுத்தியின் முன் மாதிரி எது என்று தெளிவாய்த் தெரிந்து விடுகிறது. இது ஒரு வகை.

"க. நா. சு. வின் **ஒருநாள்**, ஜோய்ஸின் யுலிஸிசைப் படித்த உற்சாகத்தினால் எழுதப்பட்டது."[25] என்பாரின் கருத்துப் பின்னர்ப் பலராலும்[26] ஏற்றுக் கொள்ளப் பெற்றுப் பரப்பப்படுகிறது என்றாலும் கதையாசிரியர் அது குறித்துப் பேசவில்லை. ஆனால், பிறநாட்டு இலக்கியங்களின் பயிற்சி ஆசிரியர்க்கு இருப்பது ஒன்றே மேற்கண்ட கருத்தினை உறுதியாக்குகின்றது. இப்படித் திறனாய்வாளர் இனங் கண்டு வெளிப்படுத்தும் வகையில் உத்தியினைப் பின் பற்றித் தம் படைப்புக்களில் பயன்படுத்திக் கொள்வது இன்னொரு வகையாகும். இதில் கதையாசிரியன் தப்பித்துக் கொள்ள இயலும். ஆனால், முன்னதில் அப்படி இல்லை. எவ்வாறாயினும், புனைகதையாசிரியர்கள் பிறரின் உத்திகளை மேலே காட்டப் பெற்ற இரு நிலைகளில் கையாள்கின்றனர் என்பது தெளிவு.

உத்தி பிறக்கிறது

எந்த முயற்சியும் எடுக்காமல் தன்னியல்பாக ஒன்று அமையும். அந்த ஒன்றிற்கு அடுத்தடுத்து விழித்துக் கொண்டு வன்மை ஏற்றும் போது அல்லது அந்த ஒன்றினை அடிக்கடிக் கையாளும் போது அது உத்தியாகி விடுகிறது. நாவலாசிரியை ஐ. காம்ப்டன் பர்னெட் (I. Compton - Burnett) டின் முதல் நாவல் என்று கருதப்படுகிற *பாஸ்டர்ஸ் அண்ட் மாஸ்டர்ஸ்* (Pastors and Masters 1925) என்னும் பெயர் எம் முயற்சியின் விளைவாலும் தோன்றி இருக்காது. மாறாக, ஆசிரியையின் தன்னியல்பால் தோன்றி இருக்க வேண்டும். ஆனால், ஆசிரியையின் அடுத்தடுத்த நாவல்களாகிய *பிரதர்ஸ் அண்ட் சிஸ்டர்ஸ்* (Brothers and Sisters - 1929), *மென் அண்ட் ஒய்விஸ்* (Men and Wives - 1931), *மோர் விமன் தேன் மென்* (More Women than Men - 1933), *எ ஹவுஸ் அண்ட் இட்ஸ் ஹெட்* (A House and Its Head - 1935), *டாட்டர்ஸ் அண்ட் சன்ஸ்* (Daughters and Sons - 1937), *எ:பேமிலி அண்ட் எ பார்ச்சுன்* (A Family and A Fortune - 1939), *பேரட்ன்ஸ் அண்ட் சில்ரன்ஸ்* (Parents and Children - 1941), *எல்டர்ஸ் அண்ட் பெட்டர்ஸ்* (Elders and Betters - 1944) ஆகியவற்றி பெயர்கள் **'உம்'** (and) இணைந்து வருவதைப் பார்க்கையில் அவர் அப்படி

அமைப்பதை ஓர் உத்தியாகக் கொள்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இன்னும் சொல்வதானால், ஆசிரியையின் மொத்த நாவல்கள் ஒன்பதுக்கு இரண்டு மட்டுமே இப் போக்கினின்றும் மாறி உள்ளன. அவை *டோலெரீஸ்* (Dolores), ***மோர் விமன் தேன் மென்*** என்பன.

இது வரையிலும் நூல் வடிவில் வெளி வந்துள்ள ஐசக் அருமை ராஜனின் மூன்று நாவல்களுமே (***கீறல்கள், அழுக்குகள், கல்லறை கள்***) 'கள்' விகுதியைப் பெற்ற பெயர்கள் உடையவை. பத்திரிக்கை களில் வெளியாகி உள்ள இரண்டு குறு நாவல்களின் பெயர்களும் (***சில மாறுவேடங்கள், காக்கைக் கூடுகள்***) இம்மாதிரியானவை. ஆகவே, நாவலாசிரியர் தம் நாவல்களுக்குப் பன்மைப் பெயர்களைக் கொண்ட தலைப்புக்கள் கொடுப்பதை ஓர் உத்தியாகக் கையாள் கிறார் என்பது இவற்றால் விளங்குகிறது. ஈழத்துக் கதையாசிரியர் எழுதிய ***வீ*** என்பது சிறுகதைகளின் தொகுப்பு நூல் ஆகும். இதில் தேர், கணை, அணி, வேலி, ஈரா, நெறி, விலை, மறு, வீ, சுவை, சிதை, வீடு, முள் ஆகிய 13 கதைகள் உள்ளன. இவற்றுள் வீ, என்பது மட்டுமே ஓரெழுத்து ஒரு மொழி. மற்ற பன்னிரண்டு சிறுகதைகளின் பெயர்கள் ஈரெழுத்துக்களினால் ஆனவை எனவே, கதையாசிரியர் ஈரெழுத்து அல்லது சிறிய பெயர் கொடுப்பதையே தம் உத்தியாகக் கொள்கிறார் என்பதை அறிகிறோம். புஷ்பா தங்கதுரை, கதைமாந்தர்களின் உரையாடல்களை அமைக்கையில் பெரும்பான்மையான கதையாசிரியர்களைப்போல் இல்லாமல் '—' (Dash) - இக்குறியிட்டுப்பின் எழுதுகிறார். ஒருசில இடங்களைத் தவிர மற்றவற்றில் எல்லாம் இப்படித் தொடர்ந்து எழுதி வருவதால் இது இவரது உத்தி ஆகி விடுகிறது.

அடிக்கடியும், திரும்பத்திரும்பவும் ஒன்றினைப் பயன் படுத்துகையில் அது அவனது உத்தி என்று பெயர் பெற்று விடுகிறது என்பதைப் பார்த்தோம். அப்படி ஒன்றினைக் கையாள்' வதற்கு அவனுக்கு உள்ளார்ந்த விழைவும் நாட்டமும் பிறவும் காரணங்கள் ஆகலாம். பொதுவாகத் 'திரும்ப ஆளல்', அழுத்தம், விருப்பம் ஆகிய இரண்டின் அடியாகவே பிறக்கின்றது. உத்திக்கும் இக்கோட்பாடு உடன்பாடானதே. எனவேதான், ஓர் எழுத்தாளரிடம் எத்தனையோ உத்திகள் இருந்தாலும் ஒன்று முனைப்பாக—பளிச்சென்று தெரிகிறது. கல்கி தம் சிறுகதைகளில் ஓர் உத்தியினையே விரும்பிப் போற்றுவதாகக் கூறுவர் டாக்டர் மா. இராமலிங்கம் :

> கதைப் பின்னலில் கல்கி விரும்பிப் போற்றும் உத்தி எதிர்பார்ப்பும் புதிருமே (Suspense and Mystery)

யாம்... கல்கியின் கதைகளில் ஏறத்தாழ மூன்றில் இரு பங்குக் கதைகள் எதிர்பார்ப்பு நிலையையும் புதிரையும் உண்டாக்குவன.[27]

இந்த மதிப்பீடு போலவே விந்தனின் கதைகளை ஆராய்ந்தவர், விந்தனின் கதைத்தலைப்புக்கள் அந்தந்தக் கதையின் இறுதிப் பத்தியிலேயோ, வரியிலேயோ இடம் பெறுகின்றன என்பர்.[28] இத்தன்மை விந்தனின் விருப்ப உத்தியாகி விடுகின்றது

கலந்து-வளர்ந்து-முதிர்கின்றது

'சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்', 'கத்தக் கத்த ராகம்; காரக் கார ரோகம்' என்பன பழமொழிகள். இவற்றால் ஓர் உண்மை தெளிவாகின்றது. எந்த ஒன்றும் தொடர்ந்த பயிற்சியினால் நேர்த்தியும், வளர்ச்சியும் பெறுகின்றது என்பதுதான் அது. இந்தக் கருத்து, கலை யாவினுக்கும் முற்றிலும் பொருந்தும். உத்தியும் ஒரு கலை. எனவே, இக்கோட்பாடு இதற்குப் பொருந்து கிறது. கையாளக் கையாள ஓர் உத்தி நேர்த்தியும் வளர்ச்சியும் பெறுகிறது.

எந்தக் கலையிடத்தும், எந்தக் கலைஞனிடத்தும் ஒரே ஓர் உத்தி மட்டுமே உள்ளது என்று கூறினால் அது புரியாக் கூற்றாகும். மனிதன் பல உறுப்புக் கூறுகளின் வடிவமாவதுபோல், கலையும் பல உத்திகளின் தொகுதியாகும்; வடிவமாகும். எந்தக் கலை யானாலும், எந்தக் கலைஞனானாலும் பலவற்றின் - பல உத்தி களின் கூட்டுச் சேர்க்கையினாலேயே நிலைபேறு அடைகின்றது/ நிலைபேறு எய்துகின்றான். உத்திகளின் கலவைக்கேற்ப, ஒன்று ஒன்று குறைந்தும் மிகுந்தும் படைப்பாளனின் ஒவ்வோர் ஆக்கத்தி லும் நாம் கண்டுகொள்ளுமாறு அமைகின்றன.

சுஜாதாவின் 'வீணா - 1968' என்னும் சிறுகதை படர்க்கைக் கூற்று நிலை உத்தியில் (Third Person Point of View) சொல்லப் படுகிறது. இதனை இன்னும் பகுத்தால், 'தன்மைப் பன்மை உத்தி' (We Device) ஆகும். ஏனெனில், ஆசிரியர் வாசகரைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு, 'நாம் முன் சொன்னபடி அந்தர் சாது' என்று கதை கூறுகிறார். அப்புறம், கிண்டல், வருணனை, உவமை, சொல் பொருள் பின் வரு நிலை, நாடகம், அங்கதம், கடிதம் முதலிய உத்திகள் விரவிக் கதை தொடக்கத்திலிருந்து இறுதி வரை வளர்ந்து (Straight tellring technique) முடிகின்றது. இவ்வாறு பலதரப்பட்ட உத்திகள் இந்தக் கதையில் கலந்து ஓர் உருவைத் தந்தாலும் நாடக உத்தியே அழுத்தமும் முதன்மையும் பெறுகின்றது.

ஏற்கனவே கூறியது போல் ஓர் உத்தியை மென்மேலும் பயன் படுத்திப் பயிற்சி பெறப்பெற, அந்த உத்தி கூராகி ஒளி காலுகின்றது. இதனை ஒரு கதையாசிரியனின் ஓர் உத்தி, தொடக்கக் காலம் முதல் தற்காலம் வரையில் எங்ஙனம் மாறி வந்துள்ளது என்பதைத் தொடர்ந்து ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அகிலனின் முதல் சிறுகதையாகிய 'அவன் ஏழை' (1938) யில் கதை கூறும் முறை ஆசிரியரின் கூற்று நிலை உத்தியில் அமைந்துள்ளது. கதை நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கப் பெற்று நீண்ட காலக் கெடுவுடன் மெல்ல நகர்ந்து நிறைகின்றது. மொழிநடை, பின்னணி போன்றவற்றில் குறைபாடு கள் தோன்றுவதுடன் கதை கூறப்படும் உத்தியிலும் பயிற்சிப் போதாமை இருப்பதால் சிறுகதை ஒரு வரலாறாக அமைந்து விடுகின்றது. கதை பின்னோக்கித் திரும்பாமல் முன்னோக்கியே செல்கிறது நாடகப் பாங்கோ, நனவோட்டமோ குறிப்பிடுமாறு அமையாமல் ஆசிரியரின் அனுபவத்தைச் சார்ந்ததாகச் 'சிறுமுகங் காட்டி' நகைக்கின்றது. சுருங்கக் கூறுவதாயின், கதையாசிரியரின் பால பாடமாகும் அச்சிறுகதை. 25 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப் பட்ட சிறுகதை 'ரெயிலில் இருவர்' (1963). இதுவும் முன்மாதிரி ஆசிரியரின் கூற்று நிலை உத்தியில் அமைந்திருக்கிறது. எனினும், மொழி நடை, பின்னணி முதலியவற்றில் வளர்ச்சியும், பொருத்தமும் முன்னையதினின்றும் மாறுபட்டுச் சிறந்து விளங்கு கின்றன கதை. திருச்சியில் இரவு பதினொன்றரை மணிக்குத் தொடங்கி மறுநாள் காலை கோயம்புத்தூரில் முடிகின்றது. 'அவன் ஏழை'யில் முளை விட்ட நாடக உத்தியும், நனவோட்ட உத்தியும் இதில் வளர்ச்சி அடைந்துள்ளன. 'தீபாவளி' இரண்டு கதை களிலும் ஒரு காரணமாய் அமைந்து ஒற்றுமையைப் புலப்படுத்துவது போல், இரண்டிலும் கதை நிகழ்ச்சிகள் முன்னோக்கி நகர்ந்து ஒற்றுமையைத் தோற்றுவித்துள்ளன என்றாலும், இரண்டினையும் ஒருங்கு வைத்து மருங்கு ஆராய்கையில், கால இடைவெளிக்கேற்ப ஆசிரியரின் கதை கூறும் திறனிலும், உத்தியிலும் ஒளி காலுவதை நன்கு அறிய முடிகின்றது. இதற்கு அடிப்படைக் காரணம், ஆசிரியர் அடுத்தடுத்து மேற்கொண்ட பயிற்சியே. இப்படிப் படைப்பாளியிடம் காலத்தோடு ஒட்டி ஓர் உத்தி தன்னில் வளர்ந்து முதிர்ச்சி அடைகின்றது என்பதை அறிகிறோம்.

அகிலன் தமது முதல் சிறுகதையைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "கதையின் அமைப்போ நடையோ அப்படி ஒன்றும் சிறப்பாக அமைந்திருக்க வழியில்லை. சிறுவன் ஒருவனின் முதல் முயற்சி அது. ஆனால் அதன் உள்ளடக்கத்தின் உண்மை மட்டும் பரிசுத்தமானது"[29] என்கிறார். இவ்வெண்ணம் அப்போது

இல்லாமல் இப்போது ஏற்படுவதற்குக் காரணம் அவருடைய வளர்ச்சியே ஆகும். அலக்ஸி டால்ஸ்டாய், "...நானே என்னுடைய பிழைகளைப் பார்க்க முடிகின்ற வரையில், நான் மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறேன் என்பது, பொருளாகும்."[30] என்று கூறுவது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இவரே,

> எனது முதல் முயற்சியான 'ஆர்ஃக்கிப் (ஒரு குதிரைத் திருடனைப் பற்றியது) என்ற கதை எனக்கு மிகவும் ஏமாற்றம் அளித்தது. சொற்களையும் வாக்கிய ஒழுங்கையும் திருத்தியமைத்தும், சில சொற்களுக்குப் பதில் வேறு சொற்களைப் பெய்தும் — நான் அந்தக் கதையினை ஐந்து தடவை திரும்ப எழுதினேன். ஆனால், முடிவானதொரு வாசகத்தை என்னால் அடைய முடியவில்லை. எழுதியதனைத்தையும் திரும்பவும் அடித்திருப்பேன்.[31]

என்று வேறோர் இடத்தில் கூறுகிறார். அப்படி அவர் எழுதிய ஐந்து கையெழுத்துப் படிகளையும் ஒருங்கு வைத்துக் கண்டால் அவற்றில் உத்திகள் எவ்வாறெல்லாம் மாறி அமைந்துள்ளன என்பது தெளிவாய்ப் புலனாகும். இவரைப் போலத் தமிழ்க் கதையாசிரியர்களின் ஒரு கதை குறித்த பல கையெழுத்துப் படிகளை ஆராய நேர்ந்தால் நமது உத்தி பற்றிய இச் சிந்தனைக்குத் தகுந்த சான்றாதாரங்கள் கிடைக்காமல் போகா.

எதிர்பாராமல் கைவசமாகும்

1934-இல் எர்னஸ்ட் ஹெம்மிங்வேயின் (Eruest Heming Way) தம்பி லெயிசெஷ்டர் (Leicester) தன் அண்ணனிடம் தான் ஒரு கதையாசிரியனாக வேண்டும் என்று ஆசைப்பட்டு அறிவுரையை நாடினார். அதற்குத் தமையன், கிப்ளிங், கிரேன், டால்ஸ்ட்டாய், தாஸ்தோவேய்ஸ்கி, ஜேம்ஸ், மாப்பசான், ஸ்டென்ஹல் ஆகியோரின் நூல்களையும் ஹக்லிபெர்ரி ஃபின் (Huckleberry Fiun) புட்டன் புருக்ஸ் (Budden brooks) நாவல்களையும் படிக்கச் சொன்னார். இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. எழுத்தாளராவதற்குச் சில முன் மாதிரிகள் தேவையாகின்றன. எவ்வளவுதான் எழுத்துப் பயிற்சி கொடுக்கப் பட்டாலும் உள்ளார்ந்த எழுச்சியும், வேட்கையும் இருந்தால் ஒழிய அது கைகொடுப்பதில்லை; தானே முயன்று போராடினால் அன்றி வேறு வழி இல்லை. 'நாவல் எழுதுவது எப்படி?', 'சிறுகதை எழுதுவது எப்படி?' என்றெல்லாம் போதித்தாலும் கூட ஒருவன் கதையாசிரியன் ஆவதில்லை. எழுதி எழுதிக்

கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டு, மேலும் மேலும் முயன்றுதான் உலகத்துப் பெரும் எழுத்தாளர்கள் அனைவரும் உருவாகி இருக்கிறார்கள். இவர்கள் தொடக்கத்தில் முன் மாதிரிகளைப் பின்பற்றிப் பிறகு போகப் போகத் தமக்கென வழியை அமைத்துக் கொண்டவர்களே ஆவர். அங்ஙனம் தன்னுரிமை கொண்டு எழுத்துலகில் நடமாடும்போது பழைய பாட்டையிலிருந்து விலகிப் புதுப்புது பாதைகளில் பயணந் தொடங்குகின்றனர்.

தொடக்கத்தில் இரவல் வாங்கிய உத்திகளைக் கைவிட்டாவது அல்லது அவ்வுத்திகளிலாவது அவர்கள் சித்துகள் புரிய முயல் கின்றனர். இப்போக்கை ஒவ்வோர் எழுத்தாளரிடமும் காணலாம். ஆக, உத்திகளைப் பொறுத்த மட்டில் எழுத்தாளர்கள், பல காலம் பயின்று தேர்ச்சி பெற்ற பின்னரே தம் பங்கை அல்லது தம் ஆளுமையைக் காட்ட வேண்டியவர் ஆகின்றனர். த. ஜெயகாந்தன் பல சிறுகதைகளையும், நாவல்களையும் எழுதித் தன்னை வளர்த்துக் கொண்ட பிறகு, புது மாதிரியாய்ச் *சினிமாவுக்குப் போன சித்தாளுவை* (1972)ப் படைக்க முடிந்திருக்கிறது. இதில் கதையாசிரியர் தாம் பிற நாவல்களில் கையாளாத கொச்சை மொழியிலேயே கதை சொல்லும் உத்தியினைக் (Colloqiual point of view) கையாண்டிருககிறார். இந்நாவலுக்குப் பின்னர் த. ஜெயகாந்தன் எத்தனையோ நாவல்களை எழுதி இருப்பினும் இவ்வுத்தி அவற்றில் ஆளப்படவில்லை. என்ன காரணம்? இதற்கு முன்னும் பின்னும் பலரும் கதை சொல்லும் மொழி நடையில் (Standard language) எழுதி வருகின்றவரிடம் இப்படி ஓர் இடை வெட்டு — ஒரு பிறழ்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம், வேட்ஸ் வொர்த் கூறுவது போலச் 'சக்தி வாய்ந்த உணர்ச்சிகளின் தன்னிச்சையான கொந்தளிப்பே' (Spantaneons overflow of powerfull feelings) ஆகும். த. ஜெயகாந்தன் இந்த மன நிலையில் இருந்த போதுதான் இந் நாவலை எழுதி இருக்க வேண்டும். அவரையே மீறிய உள்ளுணர்வின் ஆட்சிக்கு அவர் ஆட்பட்டு விட்டதால் தான் அவர் அவரது எல்லையைக் கடந்து அப்பால் போக முடிந்திருக்கிறது. அதே எல்லையை அடுத்தடுத்த படைப்புக்களின் துணை கொண்டு அவரால் கடக்க இயலாமல் போனதற்கு அதே உத்தி அவருக்குக் கைவசப்படாமல் போவதே காரணம் எனலாம். இன்னொன்றையும் இங்குக் கவனிக்கவேண்டும். *சினிமாவுக்குப் போன சித்தாளு*வின் களமும், கதைமாந்தரும் அவ்வுத்திக்குப் பக்க பலமாக அமைந்ததுபோல், பிற நாவல்களின் களங்களும், கதைமாந்தர்களும் அதற்குத் துணையாகாமல் போகும் போது, கொச்சை மொழிக் கூற்றுநிலை உத்தி அவசியமற்றதாகி

விடுகிறது. எப்படியாயினும், கதையாசிரியரைப் பொறுத்தவரை அது எதிர்பாராமல் கையில் விழுந்த கனிதான். இவ்வாறு, கதையாசிரியனிடம் ஓர் உத்தி இயல்புக்கு மாறாகத் தோன்றி, மென்மேலும் வளராமல் தோன்றிய நிலையிலேயே தேங்கி நின்று விடுகின்றது. ஆயினும், அப்படிப்பட்ட உத்தி அவனை நிலை நிறுத்துவதோடு தன்னையும் நிலையாக்கிக் கொள்கிறது. இங்கு ஜமாசிய மொழி எழுத்தாளர் ஜான் ஹயர்னி (John Hearne) "நடையும் உத்தியும் மிக இன்றியமையாதவை. நீங்கள் எதிர்பாராத நிலையில் ஒருசெய்கை உங்களிடம் வரும்போது, அதனைப் பற்றிய விளக்கம் தேவையாகிறது. அப்பொழுது நடையையும், உத்தியையும் நீங்களே கண்டுபிடிப்பீர்கள்[32]" என்று கூறுவது நினைக்கத் தக்கது.

(தொடரும்)

குறிப்புகள்

21. The Indian novelist is not usually attracted to new techniques in plotting, narration, or characterization.
—K. R. Srinivasa Iyangar, 'The Novel: Themes, Background, Types', *Indian Writing in English*, p. 329.

22. Most Indian novelists using social Theme are, no doubt, influenced in one way or other by the 19 th and 20 th Century European exponents of social criticism and by the modern European techniques of fiction, such as naturalism of Zola, symbolism of conrad, psychological realism of Dostoevshy, stream of consciousness of Joyce, or even the existentialism of Camus. Though these techniques were naturally evolued in Europe out of waves of literary movements as a recreation or development from earlier stage, Indian novelists found these techniques ready-made, and used them at random simultaneously or alternatively in their works.
—John B. Alphonso — Karkala, 'Themes in contemporary Indian Novels', *Comparatine World Literature*, P.24.

23. புதுமைப் பித்தன், 'முன்னுரை' *சித்தி* ப. v

24. நா. பார்த்தசாரதி, 'முன்னுரை', *பட்டு பூச்சி*, ப. 3.

25. க. கைலாசபதி, *தமிழ் நாவல் இலக்கியம்*. ப. 111,

26. பெ. கோ. சுந்தரராஜன், கோ. சிவபாத சுந்தரம் (*தமிழ் நாவல்*, பக். 235.), தெ. பொ, மீனாட்சி சுந்தரன் (*Indian Literature Since Independence*. P. 305), மௌனி (பேட்டி, *தாய்*, 22—8—82) ஆகியோர் இக்கருத்துடையோர். ஆனால், க. நா. சு. தம் எழுத்துக்கு வழி காட்டியாக ஹென்றி ஜேம்ஸையே குறிப்பிட்டுள்ளார். (***இலக்கிய விசாரம்***, பக். 41)
27. டாக்டர் மா. இராமலிங்கம், *விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்*, பக். 191-92.
28. கதைத் தலைப்புக்களைப் பொறுத்த வரையில் விந்தனிடம் ஒரு வழக்கம் காணப்படுகின்றது. கதையின் இறுதி வரியிலோ, இறுதிப் பத்தியிலோ உள்ள சொல்லையோ, சொற்றொடரையோ அவர் பல சிறு கதைகளுக்குத் தலைப்புக்களாக அமைத்துள்ளார்.

    — டாக்டர் இரா. மோகன், *புனைகதைத்திறன்*, பக். 30.
29. அகிலன், ***எழுத்தும் வாழ்க்கையும்***, ப. 85.
30. அலக்ஸி டால்ஸ்டாய், *எழுதும்கலை*, ப. 36.
31. மேற்கண்ட நூல், ப. 28.
32. Style and Technique are very important, but if the gesture that comes to you when you are not looking for it really need explanation, then you 'll find the style and technique to work it out.

    — John Hearme, *Contemporary Novelists*, P. 619.

இந்தியால் வரும் கேடு

—முனைவர் **சாலை இளந்திரையன்**
பேரவை இல்லம்,
11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-86.

தமிழின் மீதும் தமிழகத்தின் மீதும் இந்தியின் படையெடுப்புப் பலகாலமாகவே இருந்துகொண்டுதான் இருக்கிறது. இதனால், தமிழ் வாழ்விலே தமிழின் செல்வாக்கு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதை உணரத் தெரியாத அரைகுறை ஆட்களும் சுகவாச எழுத்தாளர்களும், திடீர்திடீரென எழுந்துகொண்டு, "இந்தச் சுண்டைக்காய் இந்தியினால் மாண்புமிகு நமது தமிழை அழிக்க முடியுமா? படியுங்கள், படியுங்கள்,—இந்தியைப் படியுங்கள்!" என்று முழக்கமிடுகிறார்கள்.

இந்தி ஊடுருவல்

இவர்கள் இப்படி 'முழக்கமிட்டுக் கொண்டிருக்கும் போதே, தமிழகத்தில், தமிழ் மொழி — பண்பாடுகளின் நிலை என்ன? பார்த்த பார்வையிலேயே தெரிகிறது: தமிழ் அடிபட்டு விழுந்து கிடக்கிறது; இந்தி அதன் மீது கொடியேற்றிக் கொக்கரிக்கிறது.

தமிழகத்துத் தமிழ்த் தலைவர்களின் பெண்மக்கள் கூட இந்திக்காரிகளாகவே உடையணிந்து நடமாடுகிறார்கள்; தமிழகத்து 'அறியாச் சிறுசுகள் எல்லாம் இந்திப் பாடல் கேட்டே இடுப்பை ஒடிக்கிறார்கள் ;தமிழகத்தின் சின்னஞ்சிறிய ஊர்களிலே கூட இந்தித் திரைப்படம் ஓடுகிறது. ஏன்,பல தமிழ் வீடுகளில், — தமிழ்ப் பெயர்களை மட்டுமல்லாமல் சமஸ்கிருதப் பெயர்களையும் கூடக் கீழே தள்ளிவிட்டுத், — தங்கள் குழந்தைகளுக்கு ரமேஷ், சுரேஷ், ராஜேஷ், விமல், ராஜேந்தர், ப்ரீத்தி, ரம்யா, கமலேஷ், ப்ரவீண் என்டன போன்ற இந்திப் பெயர்களை இட்டு அழைத்துத், தங்கள் தமிழ் நாக்கையே தாறுமாறாக வளைக்கிறார்கள்.

இந்த இடத்தை விட்டுச் சற்றே உள்ளே இறங்கினால், நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது: 'இந்தி படித்தால் வேலை வாய்ப்புக் கிடைக்கும்' என்னும் பல்லவி இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இந்தியே மத்திய அரசின் ஆட்சிமொழி என்று அரசியல் சட்டத்தில் எழுதியது அடிக்கப் படாமலே இருப்பதால், இந்தப் பொய்ம்மைக்கும் இளைஞர்களிடத் திலே வரவேற்பு இருக்கிறது.

வேலை இல்லாத் திண்டாட்டம் இந்தியா எங்கும் பரவலாக உள்ளது; இந்திமொழி பேசும் மாநிலங்களில், மற்ற மாநிலங்களை விட அதிகமாக உள்ளது. இந்தியைப் படித்தவர்களுக்கோ, இந்தியைப் பாட மொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கோ இந்தி மாநில அரசுகளால் வேலை கொடுக்க முடியவில்லை. ஆனாலும், தமிழன் இந்தி படித்தால் மத்திய அரசின் வேலை கிடைக்கும் என்கிற பொய்நம்பிக்கை இங்கே வலுவாகப் பரப்பப் படுகிறது. அதாவது இங்குள்ள மாதச் சம்பள மேதைகள், இந்திக்கு இப்போதே நடைத்தடம் போடுகிறார்கள். இவர்களின் பாட்டனும், பாட்டனின் அப்பனும்தான், முன்பு, இங்கே, இப்படி ஆங்கில மேலாண்மைக்குத் தடம் அமைத்தவர்கள் !

இத்தகு அயல்மொழி வரவேற்புப் பணியிலே ஈடுபட்டிருப்பவர் கள்தான், தமிழின் பழமையையும் வளமையையும் ஓங்கிப் பேசித், "தமிழை யாராலும் அழிக்கவே முடியாது, எனவே (முன்பு ஆங்கிலம் படித்து வயிறு கழுவியது போல) இந்தி படியுங்கள்" என்று விளம்பரம் செய்கிறார்கள். "தமிழை அழிக்கவே முடியாது,- அதன் வளர்ச்சியை யாராலும் தடுத்துவிடவே முடியாது" என்று மார்தட்டுகிற இவர்கள்தான்,- மறுமூச்சிலேயே, "தமிழில் மருத்துவத்தைக் கற்பிக்க முடியாது,- தொழிலியலை, வாணியலைத் தமிழில் சொல்லவே முடியாது"என்றும் அறைந்து சொல்லுகிறார்கள் !

இவர்கள் சொல்லுகிற இரண்டிலே எது உண்மை? தமிழின் வளர்ச்சி வேறு எந்த மொழியினாலும் தடைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா, அல்லது, தமிழ்மொழி புதிய துறைகளுக்கு ஏற்றதாக வளர்ந்தில்லை என்கிறார்களே, அது உண்மையா ?

தமிழ்மொழி இன்றைத் தேவைகளுக்கு உரிய மொழியாக வளர்ந்தில்லை என்பது உண்மையானால், அந்த வளர்ச்சி யின்மைக்கு, ஆங்கிலமும் பிறமொழிகளும் இங்கே தலைமை பெற் றிருந்தது காரணம் அல்லவா?

தேய்ந்த கதை

நமது தாய்மொழியாகிய தமிழ் சொல்வளம் மிக்க ஒரு மொழி; தொடர்ச் சீர்மை மிக்க ஒரு மொழி ; மனித வாழ்வில் வளரத்தக்க அனைத்துச்சிந்தனைகளையும் ஏந்தித் தரத்தக்கதோர் இனியமொழி. ஆனாலும், தகுந்த வாய்ப்புகள் தரப்படாததால், தமிழ்மொழி, இன்று, பலதுறை வளங்கள் இல்லாத மொழியாகவே இருந்து வருகிறது.

பிற்காலச் சோழர்காலம் வரையில் அரசுத் துறையில் வழங்கி வந்த தமிழ்மொழி, அதன் பிறகு ஏற்பட்ட ஆந்திரர், இசுலாமியர் படையெடுப்புகளால் ஆட்சி மேடையிலிருந்து அகற்றப்பட்டது. ஆங்கிலேயர் வந்த பிறகோ, அலுவலகத்தின் பக்கமே வராமல் தமிழ்மொழி விரட்டியடிக்கப்பட்டுள்ளது.

சற்றே கவனித்தால் நன்கு விளங்கும் ; ஆங்கிலேயர் காலத்து அலுவலக ஆங்கில மொழியில் உருதுச் சொல் கலந்திருந்தது; அரபி, பாரசீகச் சொற்கள் கலந்திருந்தன. தமிழ்ச்சொல் மட்டும் கலந்திருக்க வில்லை. காரணம் என்ன ? அதற்கு முந்திய 400/500 ஆண்டு களில் இங்கே (தமிழகத்தில்) தமிழ் ஆட்சிச் சொல் எதுவும் ஆள்வோரிடையே புழக்கத்தில் இல்லை ; இல்லாதபடி, உருதுவும் பெர்சியனும் புகுந்து தமிழை விலக்கி ஒதுக்கி வைத்துவிட்டன.

அதுபோலவே, தமிழகத்தின் படிப்பு மொழியும், தொழில் மொழியும், மருத்துவ மொழியும் ஆங்கிலமாகவே இருந்துவிட்டதால், தமிழில் இந்தத் துறைகள் வளரவே இல்லை. 100 ஆண்டுகளுக்கு முன்பே, சாமுவேல் கிறீன் என்னும் அமெரிக்க அறிஞர் (யாழ்ப்பாணத்தில்) மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவித் தமிழ் மொழியிலேயே புதிய அலோபதி மருத்துவத்தைக் கற்பித்து வந்தும்,- ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்ட தமிழகத்தில் அது வரவேற்றுப் போற்றப்படாததால், மருத்துவத்துறையில் தமிழ் வளராமல் போயிற்று. இன்று மருத்துவப் புத்தகங்களைத் தமிழில் எழுத முனைகின்றவர்கள் தடுமாறித் தத்தளிக்கிறார்கள்.

இதுபோலவே, கோயில்வழிபாடு முதல் குளங்கள் சீரமைப்பு வரை எல்லாமே வேறுவேறு மொழிகளிலேயே இங்கே நடைபெற்று வந்ததால், தமிழ்மொழி, வெறும் கவிதை, கட்டுரை, கதை மொழி யாகவே மெலிந்து நிற்கிறது. இந்த உண்மையை உணரமுடியாத 'நுனிப்புல்லர்கள்' தமிழை அழிக்கவே முடியாது என்று மார்தட்டு கிறார்கள் ; தமிழ், ஏற்கனவே வளர்ச்சி குறைக்கப்பட்டு நலிந்து நிற்கிறது என்பதை இவர்கள் உணரவில்லை.

எச்சரிக்கை தேவை

இதோ, மாதிரிப்பள்ளி என்னும் "நவோதய வித்யாலயா" வை மத்திய அரசு புகுத்துகிறது. தமிழகத்திலே உள்ள இந்தப் பள்ளி யில் இடம் பெறுவதற்குரிய நுழைவுத் தேர்வை இந்தியிலும் எழுதலாமாம்! ஏனெனில் இந்தப் பள்ளியின் பல பாடங்கள் இந்தி மூலம்தான் கற்பிக்கப்படுமாம்! அதாவது, அரைகுறையாக இங்கே

எழுப்பப்பட்டுள்ள தமிழ் வளர்ச்சி ஆர்வமும் சிதைக்கப்படுவதற்கு மத்திய அரசு வழிகோலுகிறது. நவோதயாவிலே படிக்கிறவனுக்குத் தான் மேற்படிப்பு, அவனுக்குத்தான் மேற்பதவி என்றால், தமிழில் எவன் படிப்பான் ? தமிழில் பலதுறைப் பாடப் புத்தகங்களை யார் எழுதுவார்கள் ? தமிழில் புதிய துறைகள் வளர்வதற்கு வாய்ப்பு ஏது ?

இந்த உண்மைகளை உணராத வயிற்றுத் துருத்திகளும் அன்றாடங்காய்ச்சிகளுமே "தமிழை யாராலும் அழிக்க முடியாது" என்ற நயவஞ்சகக் குரலை ஓங்கி முழக்கி, அதன் பின்னாலேயே தமிழுக்குக் குழிதோண்டுகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து, தமிழ் வாழ்வின் பல நிலைகளையும் அளாவியுள்ள தமிழ் அழிந்தால் தமிழ் மக்களின் வாழ்வே நிலைகுலைந்து போகும் என்பதை உணர்ந்திருப்பவர்கள் இந்தத் தமிழ் ஒழிப்பான்களின் பொய்ப் பிரச்சாரத்தைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சென்ற இதழ் தொடர்ச்சி

தாலாட்டு-இலக்கியம் காட்டும் இலக்கியக் கொள்கை

த. அழகப்பரசு
இளநிலை ஆய்வாளர்,
உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.

ராய. சொக்கலிங்கன் பெண்பாலுக்கும் ஆண்பாலுக்கும் தாலாட்டுகள் பாடியுள்ளார்; அதில் காப்பில்லை; பாயிரத்தில் பழந்தமிழ்ப் புலவர்கள் பேசப் படுகின்றனர். இவர் தமிழைக் குழந்தையாகக் கொண்டு தாலாட்டுப் பாடுகின்றார். இந்தத் தாலாட்டையும், கும்மிப்பாடல் ஒன்றையும் வேலூர்ச் சிறையி லிருந்தபோது பாடியுள்ளார். இதில் தீண்டாமை, மாதடிமை நாட்டடிமை போன்றவற்றைச் சாடுகின்றார்.

ஆண்பெண் சமமெனவே அவனிமுழு தும்உணரும்
மாண்பை இனிதாக வளர்ப்பதற்குக் கண்வளராய்

என்ற சமத்துவம் பேசுகின்றார். இத்தாலாட்டில் நாட்டுப்புறத் தாலாட்டுகளின் தாக்கத்தைக் காணமுடிகிறது. ஆண்தாலாட்டைப் பேசும்போது இராமன், பரதன், அருச்சுணன், கண்ணன், சீதை, ஔவையார், பாஞ்சாலி, மேகலை, ஆண்டாள், காரைக்காலம் மையார், மங்கையர்க்கரசி போன்றோரெல்லாம் இவள் தான் என்று பெண்ணைக் காட்டுகின்றார். ஆண், பெண் இரண்டனுள் பெண் தாலாட்டை முன்னரும் ஆண் தாலாட்டைப் பின்னரும் அமைத் திருக்கின்றார். பெண்பற்றிப் பேச 52 கண்ணிகளைக் கொண்டவர் ஆண்பற்றிப்பேச 32 கண்ணிகளைக் கொண்டிருக் கின்றார். காந்திமீது ஆசிரியர்க்குள்ள புலப்பாட்டை ஆங்காங்கே உணர்த்துகின்றார். நாம் காணும் தாலாட்டின் பாடற்பொருண் மையை இங்குக் காணமுடியவில்லை. இதை ஒரு சமுதாய சீர்திருத்தக் கருவியாக ஆசிரியர் கையாண்டுள்ளார்.

தமிழ்ச்செல்வி தாலாட்டு செந்தமிழ்ச்செல்வியில் வெளி வந்துள்ளது. இதனைப் படைத்தவர் அ. இளங்கோவன் என்பவர். நாம் தாலாட்டின் இயல்புகளாகக் கண்டவை சில மாற்றம் பெற்றிருக்கக் காண்கிறோம். இவற்றில் காப்புச் செய்யுள் இல்லை; தாலாட்டின் இறுதியில் அமைகின்ற வாழி இடம்பெற வில்லை. தாலாட்டிற்கான யாப்பும் இதில் காணப்படவில்லை. விருத்தம் இங்கு யாப்பாக அமைகிறது. தாலாட்டுப் பிரபந்தகளில் தாலே தாலேலோ என்ற சொற்கள் இயல்பாக இடம்பெறுவதில்லை. பெரியாழ்வார் பாடல்களில் இடம்பெற்றன; பிள்ளைத் தமிழின் தாலப்பருவங்களில் பயிலப்பட்டன. ஆசிரியர் தாலாட்டில் அச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்,

தாயாகப் பழமொழிகள் தமைப்பயந்த கன்னி நல்லாய்
சேயாகப் பெறவென்னைச் சிறுகுறிப்பில் வைத்திருந்தாய்
ஆயாத கலையிலையென் றருங்கலையெல் லாமுடையாய்
சாயாத புகழ்தழுவும் தமிழ்ச் செல்வி தாலேலோ (1)

என்பது இதன் பாடற்கு ஒரு சான்று. இதில் தமிழைப் புகழ வேண்டும் என்ற நோக்கு விஞ்சி நிற்கின்றது.

திருக்குறள் அதிகாரசாரமாகிய நன்னெறித் தாலாட்டு நீதி கூறும் தாலாட்டாக அமைகின்றது. திருக்குறளின் அதிகாரத் தலைப்புகளைத் தன்னுட்கொண்டு அதிலுள்ள ஒரு குறள் அல்லது பல குறட்களின் சாரத்தைத் தொகுத்துக் கண்ணியமைப்பில் எடுத்துரைக்கின்றது.

ஆராரோ இவ்வுலகுக் காதியா சென்றுளத்தில்
தேரார்கள் உண்மையைநான் செப்பக்கேள் கண்மணியே

என்று நூல் தாலாட்டு அமைப்பிலே தொடங்குகின்றது.

மறைமுதல் வாழ்க வையம் வான்மழை பொழிந்து வாழ்க
இறைநலம் வாழ்க அன்னா னேந்தும் செங்கோல் வாழ்க
அறைதரு முயிர்கள் வாழ்க அருட்குரு பாதம் வாழ்க
குறைபல அகற்றி என்சொற் குணநலம் கொள்வோர் வாழ்க

என்று தாலாட்டினைப் போன்று வாழியுடன், ஆனால் தாலாட்டுக்குரிய பொருளின்றி ஒருவரைத் தனித்து அமைக்காது திருக்குறள் அறக் கருத்துகளை எடுத்துரைக்கின்ற வகையில் அமைகின்றது. இவ்வாறு அறக்கருத்துகளைக் கூறுகையில் திருக்குறள் அறக்கருத்துகள் மட்டுமன்றி, பிற இலக்கியக் கருத்துகளும் அவரது வாழ்க்கை அனுபவங்களும் அவருக்குத் துணைசெய்திருக்கின்றன.

(ஒப்புரவறிதல்)

ஊருணிபோ லும்மருந்தா உன்மரமும்போல் யார்க்கும்
சேரும் துயர்தீர்த்தல் சொல்வர்கொவி கிளியே (33)

'மெய்ஞ்ஞானத் தாலாட்டு' இலக்கியத்தில் தாலாட்டுடன் சமயநெறிகளும், அறிவுரைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளமை இதனுடன் ஒப்புநோக்கத் தக்கது.

தாலாட்டு இலக்கியங்கள் பாடுபொருள் நோக்கில் தான் விரும்பிய இறைவனை/இறைவியை/இறையடியாரை/தலைவியைப்

புகழ்ந்து பாடுவதாக அமைகின்றன. சில, நீதிகளை உரைப்பதற்கும் ஒழுக்க முறைகளைப் புகட்டுவதற்கும் தாலாட்டைப் பயன் படுத்தியுள்ளன.

வெளியீடு

தன்னைச்சுட்டல்

நூலிடையில் புலவர்கள் சிலர் தங்களைப் பற்றிய குறிப்பையும் தரக் காண்கிறோம். இவ்வாறு அவர்கள் தங்களைக் கூறுமிடத்துக் குறைத்துக் கூறுகின்ற பண்பு காணப்படுகின்றது. இது ஆழ்வார் களும் நாயன்மார்களும் இவர்களுக்குக் கற்றுத் தந்த பாடங்கள் எனலாம். தன்னைத் தானே நாயினேன் (திருப்போரூர் சந்நிதி முறை தாலாட்டு, க. 27) என்பன போன்ற சொற்களால் குறித்துச் செல்வது மேற் கருத்துக்கு அரணாகின்றது.

உத்தமமா ரெவ்வு ளுறைராம சாமிசொலு
மித்தமிழ்க் கேட் டானு மிறைவலோ கண்வளராய்
(திருப்பரங்கிரி குமரவேள் தாலாட்டு, சு. 30)

என்பது போன்று சில கண்ணிகளில் தம்மையும் இலக்கியத்துள் ஈடுபடுத்திக் காட்டுகின்றனர். இது பின் வந்தோரால் இடையில் சேர்க்கப்பட்டதா என்றும் சிந்தித்தல் வேண்டும்.

வருணனை

இவ்விலக்கியங்கள் வருவணை நிலையில் செய்திகூறும் போக்கில் அமைந்துள்ளன. இயற்கை வண்ணனைகள் இவ் விலக்கிய வகையில் பரவலாகக் காணப்படுகின்றன.

செந்நெல் குலைசொரிய செங்கு வளை தான்மலர
கரும்பு கலகலெனக் கஞ்சமலர் விரிக்க
கரும்பு குழலூத தோகைமயில் விரிக்க
மாங்கனிகள் தூங்க மந்தி குதிகொள்ளத்
தேன்கடு விம்மிச் செழித்து வழிந்தோட
செந்நெல் விளைய செகமுழுதும் தானொலிக்கக்
கன்னல் விளையக் கமுகமரம் தான் பழுக்க
(கோள நாச்சியார் தாலாட்டு, 18-21)

புராணச்செய்திகள்

புராண இதிகாசச் செய்திகளும், புராணக் கதைகளும் இவ்வகை இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. இராமர் தாலாட்டு ராமாயணச் செய்திகள் பலவற்றைக் கண்ணி வகையில் எடுத்துப் பேசுகின்றது. இராமன் இராவணன் தொடர்பான கதைகளைக் கூறி இராமனின் சிறப்பை விளக்குகின்றார் ராய. சொக்கலிங்கன் அவர்கள்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

வாயுறை = மெய்ப்பொருள் நிறைவு. வேம்பும் கடுவும் சுவையாற் கைப்பும் துவர்ப்பும் உடையவாயினும் பயனால் நோய் நீக்குதலும் வளமுறுத்தலும் செய்வனவாதலின், அவைபோல உருவாற் செவிவெதுப்பும் சொற்களாயினும் அவை பயனால் வழிவழி நன்மை தருபவையாகும் என்பது கருத்து.

சொற்கள் கடுமையவாயினும் உள்ளத் தூய்மை தோன்ற வாழ்த்தொடு வரவேண்டுமென்பார் "ஒப்படைக்கிளவியின் வாயுறுத்தற்றே" என்றார். உறுத்தல் என்னும் தொழிற்பெயர் 'உறூஉ' எனத் திரிந்து நின்றது.

(எ-டு) :- இருங்கடலுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவணது இடைபிறர்க் கின்றித்
தாமே ஆண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே, சுடுபிணக்
காடுபதியாகப் போகித், தத்தம்
நாடுபிறர் கொளச் சென்றுமாய்ந்தனரே
அதனால்; நீயும் கேண்மதி அத்தை, வீயாது
உடம்பொடு நின்ற உயிரும் இல்லை
மடங்கல் உண்மையோ மாயமோ அன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்கு நோக்காது
இழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கல னாக இலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே (புறம்-363)

இஃது இடையே வஞ்சியடி விரவிய ஆசிரியப்பாட்டு.

சூ. 113 : அவையடக் கியலே அரில்தபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்று
எல்லா மாந்தர்க்கும் வழிமொழிந்தன்றே

கருத்து : முறையானே அவையடக்கியல் ஆமாறு கூறுகின்றது.

உரை : அவையடக்கியலாவது குறைவற ஆராயின், யான் வலிமையல்லாத முறையாற் கூறினும் நீவிர் வகை செய்து கொள்ளுமின் என யாவர்க்கும் பணிவுற மொழிதலாகும்.

வல்லா (வலிவல்லாமல்) எதிர்மறை. வகுத்தனர் கொள்மின் எனவே யான் வகை செய்து கூறினேன் அல்லேன் என்றவாறு. அது பணிவுடைய மொழியாகும்.

பணிந்த மொழியான் அவையோரைத்தன் நோக்கிற்குள் அடக்குதலின் அவை அடக்கியலாயிற்று. அடக்கியல் = அடக்கும் இயல்பு என விரியும்.

(எ-டு) : உண்ண முடியாத ஓதநீர் வான்வாய்ப்பட்
டெண்ண அமுதான தில்லையோ-மண்ணின்மேல்
நல்லாரைச் சேர்தலான் நான்சொன்ன புன்சொல்லும்
எல்லாருங் கைக்கொள்வர் ஈங்கு.

இது நேமிநாதத்து அவையடக்கச் செய்யுள். ஆசிரியர் காலத்து வழங்கிய இலக்கியங்கள் காணாமையின் ஏற்புடையன எடுத்துக் காட்டலரிதாயிற்று. இடைக்காலத்தார் எல்லாப்பாவகையானும் அவையடக்கம் கூறியுள்ளனர்.

சூ. 114 : செவியுறைதானே,
பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே

கருத்து : செவியுறூஉவின் இலக்கணம் ஆமாறு கூறுகின்றது. செவியுறூஉ என்பது செவியுறை என ஐகாரச்சாரியை பெற்று நின்றது.

உரை : செவியுறூஉவாவது உயர்ந்தோர் நடுவண் தன்னை வியந்து காட்டுதலின்றி அடங்கி ஒழுகுதல் நல்லோர் கடப்பாடெனச் செவிகொளக் கூறியதாகும்.

கேட்போன் உளங்கொள்ளுமாறு கூறுதலின் செவியுறையாயிற்று. பொங்குதல் - தன்னைவியத்தல் - வெகுளுதலுமாம். செவியுறு என்பது செவ்வி உறுதல் என்பதன் இடைக்குறை எனக் கொள்ளலுமாம்.

'தான்' என்றது சிறப்புணர்த்தி நின்றது. ஏகாரம் பிரிநிலை.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து" } என்புழி வியத்தல்

தருக்குதல் என்னும் பொருள்படுமாறும் அது பொங்குதல் கருத்தாமாறும் காண்க.

(எ-டு) எருமையன்ன கருங்கல் இடைதோ
றானிற் பரக்கும் யானைய, முன்பின்
கானக நாடனை நீயோ பெரும!
நீஓர் ஆகலின் நின்னொன்று மொழிவல்
அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயங் கொள்பவரோ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேஅது பெறலருங் குரைத்தே (புறம்-5)

இதுகாறும் ஆசிரியப் பாவும் வெண்பாவும் பெறும் பொருள் வகை கூறினார். இனிக் கலியும் வஞ்சியும் பற்றிய இலக்கண மரபு கூறுவார்.

சூ. 115: ஒத்தாழிசையும் மண்டில யாப்பும்
குட்டமும் நேரடிக்கு ஒட்டின என்ப

கருத்து: புறநிலை வாழ்த்து முதலாய நாற்பொருளையும் பற்றி வாரா, என விலக்கப்பெற்ற கலியும் வஞ்சியும் அதிகாரப்பட்டு நிற்றலின் அவற்றிற்குரிய இலக்கணம் கூறத் தொடங்கி முதற்கண் கலிப்பாவிற்குரிய தோரிலக்கணங் கூறுகின்றது.

இதனைக் கலிப்பா இலக்கணம் கூறுமிடத்துவையாமல் ஈண்டு வைத்துக் கூறுவதன் நோக்கம், மேல்வரும் ஆசிரியப்பா மண்டில யாப்பிற்றாய் வருதலும், ஆசிரியமும் வெண்பாவும் குட்டம் பெற்று வருதலும் உடன் கூறிப்பெறப்பட வைத்தலாம்.

உரை: ஒத்து மூன்றடுக்கி வரும் தாழிசையும், எல்லா அடிகளும் ஓசையானும் சீரானும் ஒத்துவரும் மண்டிலயாப்பும், ஒன்றொருசீர் குறைந்து வரும் குட்டமும் கலிப்பாவிற்குரியவாக வருதற்கு ஒத்தன எனக் கூறுவர் புலவர்.

தாழிசையாவது: முடுகுதலும் விட்டிசைத்தலுமின்றிச் சீரொடு சீர் தழுவிச் செல்லும் இசை. தழுவுஇசை - தாழிசையாயிற்று. அஃது ஈண்டுக் கலியுறுப்பாகிய செய்யுட் பகுதியைக் குறித்து நின்றது. அது ஒருபொருள் பற்றி அடுக்கி மூன்றாக வரின் ஒத்தாழிசை எனப்படும்.

ஒத்ததாழிசை - ஒத்தாழிசையாயிற்று.

மண்டிலம் என்பது வட்டம். விருத்தம் என்பது இதற்கொத்த வட சொல்லாகும். அஃது எல்லா அடிகளும் சீரானும் அளவானும் ஒத்து வரும் கலியுறுப்பாகிய செய்யுட் பகுதியைக் குறித்து நின்றது.

மண்டிலம் நான்கு அடிகளாக வருவது சிறப்புடைத்து. மிக்கு வரினும் இழுக்காகாது.

குட்டம் - குறுக்கம். அளவாற் குறுகியது என்பது பொருள். அஃதாவது

''நாற்சீர் கொண்டது அடியெனப்படுமே'' என்றதனான் அதனிற் குறைந்து வரும் முச்சீர்அடி இருசீரடிகள் குட்டமெனப் பட்டன.

நேரடி என்றது கலிப்பாவை. கலி எனினும் முரற்கை எனினும் நேரடி என்னும் ஒக்கும்.

(எ-டு) கலிப்பா இலக்கணம் கூறும் வழிக்காட்டப் பெறும்.

சூ. 116 : குட்டம் எருத்தடி உடைத்து மாகும்.

கருத்து : குட்டத்திற்குரியதொரு மரபு கூறுகின்றது.

உரை : தரவு என்னும் கலிப்பாவின் முதலுறுப்புக் குட்டமாகிய அடியை உடையதும் ஆகும்.

உம்மையால் உடைத்தின்றி வருதலே பெரும்பான்மை எனக் கொள்க. எருத்தடி என்றது தரவு என்னும் உறுப்பினை, ''இதனை எருத்தே கொச்சகம்'' (செய்யு-153) என்பதனான் அறிக.

எருத்தடி குட்டமுடைத்தும் ஆகும் என மாற்றிக் கூட்டுக.

சூ. 117 : மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்
செந்தூக் கியல என்மனார் புலவர்

கருத்து : மண்டிலயாப்பும் குட்டமும் தூக்கோசை பெறுமாறு கூறு கின்றது.

உரை : ஒத்தாழிசை, மண்டிலயாப்பு, குட்டம் என்னும் மூன்றனுள் மண்டிலமும், குட்டமும் ஆசிரியத் தூக்காகிய செந் தூக்கின் இயல்பினவாகும் எனக் கூறுவர் புலவர்.

எனவே தாழிசை கலியோசை பெற்றுவரும் என்பது பெறப்படும்.

முட்டம் தனியாயும் எருத்தினுள்ளும் வருதலேயன்றி அம்போதரங்க உறுப்பாய் வரினும் செந்தூக்கியல்பிற்றாய் நிற்கு மென உய்த்துணர்க.

(எ-டு) கலிப்பா இலக்கணம் கூறும் வழிக்காட்டுதும்.

சூ. 118: நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளொடு
ஒத்தவையெல்லாம் வெண்பா யாப்பின.

கருத்து : ஓசை வகையான் நால்வகைப்பட்டு நின்ற பாக்களுள் அதிகாரப்பட்டு நின்ற கலிப்பாவிற்குரிய ஒருசார் உறுப்புக்களின் இயல்புணர்த்தித் தொடர்ந்து வெண்பா யாப்பினவாய் வருவன பற்றிக் கூறுகின்றார்.

இச்சூத்திரம் வெண்பாயாப்பினவாய் வருவனவற்றைத் தொகுத்துணர்த்துகின்றது.

உரை : ஐந்து அடி முதல் ஏழடியளவும் வரும் நெடுவெண் பாவும் ஏழு சீர்கள் கொண்ட இரண்டடியான் வரும் குறள் வெண்பாவும் கைக்கிளைப் பொருள் பற்றி வரும் செய்யுளும் பரி பாடலும், அங்கதச் செய்யுளும் இவற்றிற்கு ஒத்த பிற செய்யுட் களுமாகியவை எல்லாம் வெண்பா யாப்பினவாகும்.

அஃதாவது ஏழெழுத்து முதல் பதினான்கெழுத்தளவும் பெற்று வரும் சிந்தடியும் அளவடியுமாகிய நாற்சீரடிகளான் நடந்துவெள் ளோசை பெற்று ஈற்றடி முச்சீராய் இறுதிச்சீர் அசைச்சீராய் வரும் என்றவாறு.

நெடுவெண்பாட்டினை இடைக்காலத்தார் பஃறொடை வெண்பா என்பர் அப்பெயர் பொருந்தாமையை ஓர்ந்தறிக.

அடிவரையின்றிக் குறிப்பு மொழியாலாகிவரும் அங்கதமும் உளதாதலின் அங்கதச் செய்யுள் என்றார், செய்யுள் என்பதனை கைக்கிளையொடும் கூட்டுக. இவற்றிற்கு அடிவரையறை பிற்கூறுவார்.

பரிபாட்டு "ஏனைவெண்பா நடைத்தே கலியென மொழிப" என்றதனான் கலித்தளை பெற்று வருதலை உரையிற்கோடல் என்னும் உத்தி வகையாற் கொள்க.

மூன்றடியாய் வருவதனைச் "சிந்தியல் வெண்பா" என இடைக் காலத்தார் கொள்வர். அஃது கலியுறுப்பாக வருதலே பண்டை வழக்காதலின் ஆசிரியர் மூன்றடி வெண்பா கூறிற்றிலர் என்க.

அது சான்றோர் செய்யுளாய்த் தனித்துவரின் குறுவெண்பாட்டு என அடக்கிக் கொள்க.

(எ-டு) : நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
அடுக்குபு பெற்றிக் கிடந்த இடித்துரறி
அங்கண் விசும்பின் உருமெறிந் தெங்கும்
பெருமலை தூவ எறிந்தற்றே அருமணிப்பூண்
ஏந்தெழில் மார் பின் இயல்திண்டேர்ச் செம்பியன்
வேந்தரை அட்ட களத்து (களவழி-6)

இஃது ஆறடியான் வந்த நெடுவெண்பாட்டு
உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து

இது குறுவெண்பாட்டு.

ஏனையவற்றிற்கு எடுத்துக்காட்டு அவற்றின் சிறப்பிலக்கணம் கூறும் வழிக்காட்டுதும்.

சூ. 119 : கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரியவியலான் முடியவும் பெறுமே

கருத்து : மேற்கூறிய கைக்கிளைச் செய்யுட்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : கைக்கிளைச் செய்யுள் வெண்பா யாப்பிற்றாய் முடிதலேயன்றி வெண்பா யாப்பாகத் தொடங்கி ஆசிரியப்பா இயலான் முடியவும் பெறும். உம்மை இறந்தது தழீஇய எச்ச உம்மை. ஏகாரம் ஈற்றசை

எனவே கைக்கிளைச் செய்யுள் மருட்பாவானும் வரும் என்பது கருத்து.

(எ-டு) திருநுதல் வேர்வரும்பும் தேங்கோதைவாடும்
இருநிலம் சேவடியும் தோயும் - அரிபரந்த
போகித மூண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத் தணங்கே
(பு. வெ. மா - கைக் - 8)

சூ. 120 : பரிபா டல்லே தொகைநிலை வகையின்
இதுபா என்னும் இயல்நெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப.

கருத்து : பரிபாடற்குச் சிறப்பு விதி கூறுகின்றது.

உரை : வெண்பா யாப்பிற்குரித்தென ஓதிய பரிபாடல் தூக்குப் படத் தொகுத்துக் காணும் பாவகையின்கண் இன்னபாவின் உறுப்பு இஃது என்று கூறுமாறு இயலும் நெறியின்றிப் பொதுவாய் நிற்றற்கும் உரியது எனக் கூறுவர் புலவர்.

எதிர்மறையும்மையான் இன்னபாவின் உறுப்பு இஃது எனக் கூறற்கியலும் நெறியுற்றுச் சிறப்பாய் நிற்றலே பெரும்பான்மை என்பது பெறப்படும்.

(எ-டு) ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை
தீயுமிழ் திறலொடு முடிமிசை அணவர
மாவுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனி
சேயுயர் பணைமிசை எழில்வேழ மேந்திய
வாய்வாங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை
எரிமலர் சினைஇய கண்ணை, பூவை
விரிமலர்புரையும் மேனியை, மேனித்
திருஞெமிர்ந் தமர்ந்த மார்பினை, மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை, மால் வரை
எரிதிரித்தன்ன பொன்புனை உடுக்கையை,
சேவலங் கொடியோய்நின் வலவயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்
நாவலந்தணர் அருமறைப் பொருளே!
இணைபிரி அணிதுணி பணியெரி புரைய
விடரிடு சுடர்படர் பொலம்புனை வினைமலர்
நெரிகிடர் எரிபுரை தனமிகுதன முரண்மிகு
கடல்தரு மணியொடும் முத்தியாத்த நேரணி
நெறிசெறி வெறியுறு முரல்விறல் வணங்குஅணங்குவில்
தாரணி துணிமணி வெயிலுறழ் எழில்புகழ் அலர்மார்பின்
எரிவயிர நுதிஎறி படை எருத்து மலை இவர்
நவையினிற்
றுணிபடல் இலமணி வெயிலுறழ் எழில் நக்கு
இமை இருள் அகல முறு கிறுகு புரி ஒரு புரி நாள்மலர்
மலர் இலகின வளர் பரிதியின் ஒளி மணி மார்பு அணி
மணம் மிக நாறு உருவின விரை வளி மிகு கடு விசை
உடுவுறு தலை நிரை இதழ் அணி வயிறிரிய அமரரைப்
பொரெழுந்து உடன்று இரைத்து உரைஇய தானவர்
சிரம் உமிழ் புனல் பொழிபு இழிந்து உரம்
உதிர்பு அதிர்பு அலம் தொடா அமர் வென்ற கணை,
'பொருவேம்' என்றவர் மதம்தபக் கடந்து,
செரு மேம்பட்ட செயிர்தீர் அண்ணல்!

இருவர் தாதை ! இலங்குபூண் மாஅல் !
தெருளநின் வரவு அறிதல்
மருள்அறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே:
அன்ன மரபின் அனையோய் நின்னை
இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது?
அருமை நற்கு அறியினும், ஆர்வம் நின்வயின்
பெருமையின் வல்லா யாம்இவண் மொழிபவை
மெல்லிய எனாஅ வெறாஅது, அல்லி அம்
திருமறு மார்ப! நீ அருளல் வேண்டும்.
விறல்மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்
அறனும், ஆர்வலர்க்கு அருளும், நீ;
திறன் இலோர்த் திருத்திய தீதுதீர் கொள்கை
மறனும், மாற்றலர்க்கு அணங்கும், நீ;
அம்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களும், தெறுகதிர்க் கனலியும், நீ;
ஐந்தலை உயிரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும், மடங்கலும், நீ!
நலம்முழுது அளைஇய புகர்அறு காட்சிப்
புலமும், பூவனும், நாற்றமும், நீ ;
வலன்உயர் எழிலியும், மாக விசும்பும்,
நிலனும், நீடிய இமயமும், நீ.
அதனால்,
'இன்னோர் அனையை ; இனையையால்' என,
அன்னோர் யாம்இவண் காணாமையின்,
பொன்அணி நேமி வலம்கொண்டு ஏந்திய
மன்னிய முதல்வனை ஆதலின்,
நின்னோர் அனையை, நின் புகழொடும் பொலிந்தே !
நின் ஒக்கும் புகழ் நிழலவை ;
பொன் ஒக்கும் உடையவை ;
புள்ளின் கொடியவை ; புரி வளையினவை ;
எள்ளுநர்க் கடந்துஅட்ட இகல் நேமியவை ;
மண்ணுறு மணிபாய் உருவினவை ;
எண் இறந்தபுகழவை ; எழில் மார்பினவை.
ஆங்கு,
காமரு சுற்றமொடு ஒருங்குநின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக ! என,
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும் —
வாய்மொழிப் புலவ ! நின் தாள்நிழல் தொழுதே: [பரி-1]

இப்பரிபாடல் இதுபா என்னும் இயல்நெறியின்றி அமைந்துள்ளமை காண்க.

கரையே-கை வண் தோன்றல் ஈகை போன்ம் என,
மைபடு சிலம்பின் கறியொடும், சாந்தொடும்,
நெய்குடை தயிரின் நுரையொடும், பிறவொடும்,
எவ் வயினானும்-மீதுமீது அழியும்.
துறையே-முத்துநேர்பு புணர்காழ், மத்தக நித்திலம்,
பொலம்புனை அவிர்இழை, கலங்கல்அம் புனல்மணி
வலம்சுழி உந்திய, திணைபிரி புதல்வர்
கயந்தலை முச்சிய முஞ்சமொடு தழீஇ,
தம்தம் துணையோடு ஒருங்குஉடன் ஆடும்
தத்துஅரிக் கண்ணார் தலைத்தலை வருமே.
செறுவே-விடுமலர் சுமந்து,பூ நீர்நிறைதலின்,
படுகண் இமிழ்கொளை பயின்றனர் ஆடும்,
களிநாள் அரங்கின் அணிநலம் புரையும்.
காவே-சுரும்புஇமிர் தாதொடு தலைத்தலை மிகூம்
நரந்த நறுமலர் நன்கு அளிக்கும்மே — —
கரைபு ஒழுகுதீம்புனற்குஎதிர் விருந்து அயர்வபோல்.
கான் அல்அம் காவும், கயமும், துருத்தியும், தேன்
தேன் உண்டு பாடத் திசைதிசைப் பூநலம்
பூத்தன்று-வையை வரவு.
சுருங்கையின் ஆயத்தார் சுற்றும் எறிந்து,
குரும்பைமுலைப் பட்ட பூநீர் துடையாள்,
பெருந்தகை மீளி வருவானைக் கண்டே,
இருந்துகில் தானையின் ஒற்றி, ‘பொருந்தலை;
பூத்தனள்; நீங்கு’எனப் பொய்ஆற்றால், தோழியர் —
தோற்றம்ஓர் ஒத்தமலர் கமழ்தண் சாந்தின்
நாற்றத்தின் போற்றி, நகையொடும் போத்தந்து,
இருங்கடற்கு ஊங்குஇவரும் யாறுஎனத் தங்கான்,
மகிழ்களிப் பட்டதேன் தேறல் மாற்றி,
குருதி துடையாக் குறுகி, மரு(வ), இனியர்,
‘பூத்தனள் நங்கை; பொலிக !’ என நாணுதல்
வாய்த்தன்றால்—வையை வரவு.
மலையின் இழிஅருவி மல்குஇணர்ச் சாரச்சார்க்
கரைமரம் சேர்ந்து கவினி; மடவார்
நனைசேர் கதுப்பினுள் தண்போது. மைந்தர்
மலர்மார்பின் சோர்ந்த மலர்இதழ், தாஅய்;
மீன்ஆரம் பூத்த வியங்கங்கை நந்திய
வானம் பெயர்ந்த மருங்குஒத்தல், எஞ்ஞான்றும்,

தேன் இமிர் வையைக்கு இயல்பு.
புள்ளே புனலே புலவி இம் மூன்றினும்,
ஒள் ஒளி சேய்தா ஒளிகிளர் உண்கண்கெண்டை,
பல்வரி வண்டினம் வாய்சூழ் கவினொடும்,
செல்நீர் வீவயின் தேன்சோர, பல்நீர்
அடுத்துஅடுத்து ஆடுவார்ப் புல்ல, குழைந்து
வடுப்படு மான்மதச் சாந்துஆர் அகலத்தான்,
எடுத்தவேய் எக்கி நூக்குஉயர்பு தாக்கத்
தொடுத்ததேன் சோரும் வரைபோலும், தோற்றம்—
கொடித் தேரான் வையைக்கு இயல்பு
வரை ஆர்க்கும் புயல்; கரை
திரை ஆர்க்கும், இத்தீம் புனல்;
கண்ணியர் தாரர், கமழ்நறுங் கோதையர்,
பண்ணியஈகைப் பயன் கொள்வான், ஆடலால்
நாள்நாள், உறையும், நறுஞ்சாந்தும், கோதையும்,
பூத்தபுகையும், அவியும் புலராமை
மறாஅற்க, வானம்; மலிதந்து நீத்தம்
வறாஅற்க, வையை; நினக்கு. [பரிபாடல்-16]

சூ. 121 : கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

கருத்து : பரிபாடற்குரிய சிறப்புறுப்புக்கள் ஆமாறு கூறுகின்றது.

உரை : மேலே இதுபா என்னும் இயல்நெறியின்றி நிற்றற்கும் உரித்தெனப்பட்ட பரிபாடல் கொச்சகம், அராகம், சுரிதகம் எருத்து எனக் கூறப்பட்ட நான்கு உறுப்பும் தனக்குரிய உறுப்பாக எழுவகை அகத்திணைப் பற்றிய காமப் பொருளையும் பாடாண்டினை பற்றிய காமப் பொருளையும் குறிக்கொண்ட நிலைமைத்தாய் வரும்.

பரிபாட்டு = பரிந்தியலும் இசையினையுடையதென்பதிதன் பொருள்.

பரிதல் = தாவிச் செல்லுதல். அஃதாவது செப்பலும் துள்ளலுமின்றி அவற்றிற்கிடை நிகர்த்ததாய்த் தாவியும் தத்தியும் செல்லும் ஓசையாகும்.

இது பெரும்பான்மையும் பண்ணோடு பொருந்துமாறு யாக்கப் படுதலின் பரிபா என்னாது பரிபாட்டு எனப்பட்டது. நால்வகை

நடையுடைய குதிரையைப் 'பரி' என்பதும் இக்கருத்தானே என்றறிக.

கொச்சகம்-கொய்சகம் என்பதன் மரூஉ. பின்னும் முன்னுமாக ஆடையை மடித்து அமைக்கும் செயலினைக் கொய்சகம் என்பது வழக்கு. ஈண்டு அது சீர்களின் தொழில்மேலாய் இலக்கணக் குறியீடாக நின்றது.

அராகம் - அ + ராகம் = இசையின்றித் தாளம் பட நடக்கும் நடை இது வடசொல்-முடுகியல் வண்ணகம் அடுக்கியல் என்பவை இதற்கொத்த தமிழ்க் குறியீட்டுச் சொற்களாகும்.

நான்கு சீர்களான் முடுகி வருவனவற்றை அராகம் என்றும் ஐந்து முதல் ஏழு சீரளவும் வருவனவற்றை முடுகியல் என்றும் வழங்குதல் மரபு.

சுரிதகம் - சுருங்கிமுடிதல் என்னும் பொருளையுடையது. அதனான் இஃது இறுதி உறுப்பாகக் கொள்ளப்படுகின்றது. இதனை, வாரம் வைப்பு, போக்கியல் எனவும் வழங்குப.

எருத்து = பிடர். முன்னுறுப்பென்பது கருத்து. இது பிற உறுப்புக்களைத் தருதற்கு முதலாகி நிற்றலின் தரவு எனவும் வழங்கப்படும்.

இவற்றை முறையிற் கூறாது பிறழக் கூறினார். இதனுள் இவை நியதியின்றி முறைமாறியும் வருமென்பதை அறிவித்தற்கு என்க.

(எ-டு) போர்எதிர்ந்து ஏற்றார் மதுகை மதம்தப.
கார்எதிர்ந்து ஏற்ற கமஞ்சூல் எழிலிபோல்,
நீர்நிரந்து ஏற்ற நிலம்தாங்கு அழுவத்து,
சூர்,நிரந்து சுற்றிய, மாதபுத்த வேலோய் ! நின்
சீர்நிரந்து ஏந்திய குன்றொடு நேர்நிரந்து,
ஏறுமாறு ஏற்கும்இக் குன்று. — இது தரவு

ஒள்ஒளி மணிப்பொறி ஆல்மஞ்ஞை நோக்கித்தன்
உள்ளத்து நினைப்பானைக் கண்டனள், திருநுதலும் :
'உள்ளியது உணர்ந்தேன்; அஃது உரை; இனி, நீ எம்மை
எள்ளுதல் மறைத்தல்ஓம்பு,' என்பாளைப்
பெயர்த்துஅவன்,
'காதலாய்! நின் இயல் களவுஎண்ணிக் களிமகிழ்
பேதுற்ற இதனைக்கண்டு, யான்நோக்க, நீஎம்மை

ஏதிலா நோக்குதி' என்றுஆங்கு உணர்ப்பித்தல்
ஆய்தேரான் குன்ற இயல்பு இதுவும் தரவு.

ஐவளம் பூத்த அணிதிகழ் குன்றின்மேல்,
மைவளம் பூத்த மலர்ஏர் மழைக்கண்ணார்,
கைவளம் பூத்த வடுவொடு, காணாய் நீ?
மொய்வளம் பூத்த முயக்கம்யாம் கைப்படுத்தேம்:
மெய்வளம் பூத்த விழைதகு பொன்அணி—
நைவளம் பூத்த நரம்புஇயைசீர்ப் பொய்வளம்
பூத்தன—பாணாநின் பாட்டு.
தண் தளிர் தருப்படுத்து; எடுத்து உரைஇ,
மங்குல் மழை முழங்கிய விறல் வரையால்,
கண்பொருபு சுடர்ந்து, அடர்ந்து, இடந்து,
இருள் போழும் கொடி மின்னால் —
வெண்சுடர் வேல்வேள்! விரைமயில்மேல் ஞாயிறுநின்
ஒண்சுடர் ஓடைக் களிறுஏய்க்கும் நின்குன்றத்து,
எழுதுஎழில் அம்பலம் காமவேள் அம்பின்
தொழில்வீற்றிருந்த நகர்.
ஆர்ததும்பும் அயில்அம்பு நிறை நாழி—
சூர்ததும்பு வரைய காவால்,
கார்ததும்பு நீர்ததும்புவன சுனை,
ஏர் ததும்புவன பூஅணிசெறிவு.
போர்தோற்றுக் கட்டுண்டார் கைபோல்வ கார்தோற்றும்
காந்தள், செறிந்த கவின்,
கவின் முகை, கட்டுஅவிழ்ப்ப, தும்பி; சுட்டுயாழின்
புரி நெகிழ்ப்பார் போன்றன கை.
அச்சிரக்கால் ஆர்த்து — அணி மழை — கோலின்றே,
வச்சிரத்தான் வான வில்லு.
வில்லுச் சொரி பகழியின், மென் மலர் தாயின
வல்லுப் போர் வல்லாய்; மலைமேல் மரம்.
வட்டுஉருட்டு வல்லாய்! மலைய நெட்டுருட்டுச்
சீர் ததும்பும் அரவமுடன் சிறந்து,
போர் ததும்பும் அரவம் போல,
கருவி ஆர்ப்ப, கருவி நின்றன குன்றம்.
அருவி ஆர்ப்ப, முத்து அணிந்தன, வரை;
குருவி ஆர்ப்ப, குரல் குவிந்தன, தினை;
எருவை கோப்ப, எழில்அணி திருவில்
வானில் அணித்த, வரிஊதும் பல்மலரால்
கனி வளைத்த சுனை
புரி உறு நரம்பும் இயலும் புணர்ந்து,

கருதியும் பூவும் சுடரும் கூடி
எரிஉருகு அகிலோடு ஆரமும் கமழும்,
செருவேற் தானைச் செல்வ! நின் அடிஉறை,
உரிதினின் உறைபதிச் சேர்ந்தாங்கு,
பிரியாது இருக்க எம் சுற்றமோடு உடனே !
[பரிபாடல். 18]

சூ. 122: சொற்சீரடியும் முடுகியலடியும்
அப்பா நிலைமைக் குரிய வாகும்

கருத்து: பரிபாடற்கு இவையும் உறுப்பாக வருமென்கின்றது.

உரை: மேற்கூறிய உறுப்புக்களேயன்றிப் பரிபாடலின் பொருள் நிலைமைக்கேற்பச் சொற்சீரடியும் முடுகியலடியும் அதன் கண் வருதற்குரியவாகும்

சூ. 123: கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்தும்
முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியும்
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்தும்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்வே.

கருத்து: சொற்சீரடியின் பொது இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை: பாட்டுயாப்பின்றிக் கட்டுரையின் கூறாகி எண்ணுப் பெயராய் அப்பொருளொடு புணர்ந்தும், தூக்குப்பெற முற்றிய அடியின்றி ஒன்றொரு சீர்க் குறைவுடைய அடியாகியும் இயலசை உரியசையளவாய் நின்றும், சீராகி நிறையாமல் மேல்வரும் அசையொடு புணர்ந்து நின்றும் சொல்லளவானே சீர்த்தன்மையுற்று முடிந்து நிற்றல் சொற்சீர்க்கு இலக்கணமாகும்.

சொற்சீரடி நால்வகைப் பாக்களுக்கும் உரித்தாகலின் இவ்வகைப்பட்ட கூறுபாடுகளான் வருமெனப்பட்டவற்றுள் ஏற்பவை அவ்வப்பாக்களின்கண்வருமெனக் கொள்க.

(எ-டு) ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப்பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக்கிழங்குவீழ்க்கும்மே
(புறம் 109)

அஇஉ
எஒ என்னும் அப்பா லைந்தும் (தொல்-எழுத்-3)

இவை கட்டுரை வகையான் எண்ணொடு புணர்ந்து வந்தன.

ஒருதிறம், பாணர்யாழின் தீங்குரல் எழ
ஒருதிறம், யாணர் வண்டின் தீங்குரல்எழ (பரிபா-17)

என வருவனவும் எண்ணொடு புணர்ந்ததன் பாற்படும்.

அம்போதரங்கத்திற்குச் சொற்சீரடி என்பதொரு பெயராகலின் அம்போதரங்கமென்னும் உறுப்புச் சொற்சீர்களானாகும் என அறிக.

ஆங்கு (கலி 103) என (கலி-105) என்னும் இவை உரியசையும் இயலசையுமாய் நின்ற சொற்சீரடிகள்.

'அதனால்', 'கேட்டீ', 'ஆங்க', 'எனவிவள்', 'எனநின்', 'காயேம்' என்னும் இவை வழியசைபுணர்ந்த சொற்சீரடிகள்

அன்னையோ இஃதொன்று (கலி-84) இனித்தேற்றேம்யாம் (கலி-88) அன்னதேல் ஆற்றல்கான் (கலி-9) மறைநின்று தாமன்ற வந்தீத்தனர் (கலி-86) இவை முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாய் வந்த சொற்சீரடிகள்.

சொற்சீர்த் திறுதல்' என்றதனான் சொல்லே ஈறாகிஇறுதலும் சொற்சீரடியாம். அஃது அன்னையோ (கலி 110) தொழுவத்து (கலி107) எனவரும்.

இங்ஙனம் பிறவாறும் வருவனவற்றை ஓர்ந்தறிக. வழியசை புணர்ந்த சொற்கள் கூனாய் நிற்குமிடமும், சொற்சீரடியாய் நிற்கு மிடமும் பொருள் நோக்கி யறிந்து கொள்க.

கூன் பொருளியைபு விட்டிசைக்கும். சொற்சீரடி விட்டிசையாது பொருள் தொடர்புற்று நிற்கும்.

சூ. 124: அங்கதந்தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்தது எனவிருவகைத்தே.

கருத்து: வெண்பாயாப்பின என்றவற்றுள் இறுதி நின்ற அங்கதத்தின் வகையும் அவற்றின் பெயரும் கூறுகின்றது.

உரை; அங்கதச் செய்யுளின் இயல்பினைக் குறைவற ஆராயின் அவை செம்பொருளங்கதம் பழிகரப்பங்கதம் என இரு வகைத்தாகும்.

அங்கதமாவது எள்ளலொடு கூறும் வசை. புகழ்தலைப் போலக் குறிப்பான் எள்ளவும் படுமாகலின் அதனை ஓர்ந்துணர வேண்டுதலின் அரில்தபத்தெரியின் என்றார்.

(எ-டு): பின்னர்க் காட்டப் பெறும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — உரு. 85/—
   — Prof. M. S. Purnalingam Pillai — U. S. $ 17

2. மொழி நூல்
   — மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75/—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U. S. $ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Rs. 60/—
   — Prof. P. Saravanavel — U. S. $ 12

5. நாமதீப நிகண்டு — உரு. 68/—
   — கல்லிடை நகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா. கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Rs. 60/—
   — Prof. K. Nambi Arooran — U. S. $ 12

விற்பனைக் கழிவு :	அஞ்சல் வழி	25%
	நேரில்	30%
	அஞ்சல் செலவு தனி	
	பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு	40%
	விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு	

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்கவெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ. 50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ. 30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ. 60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ. 6	00
கபிலர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ 4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ. 3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ. 2	00
கவியரசு நினைவு மலர்	ரூ. 1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ. 0	62
சிவமும் செந்தமிழும்—பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ. 0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்	7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ. 6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613 002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. **இராமநாதன்,**

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர் **க. வெள்ளைவாரணன்,**

142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி **சு. செல்லப்பன்,** எம். ஏ., பி. டி., பி. எல்.,

இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் **தமிழண்ணல்,** எம். ஏ., பிஎச். டி.,

தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

டாக்டர் **சி. பாலசுப்பிரமணியன்,** எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.,

முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

பேராசிரியர் **சி. கோவிந்தராசன்,**

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் **ஆ. பாலன்,** எம். ஏ., எம். ஃபில்.,

துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

புலவர் **மீனா. இராமதாசு,** எம். ஏ.,

தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2

திரு. **பா. மதிவாணன்,** எம். ஏ., எம். ஃபில்.,

துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் **ச. பாலசுந்தரம்**

Regd. No. [illegible] TB/24.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு

6. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர்
சரஸ்வதி மகால் நூல்நிலைய இதழ்,
அரண்மனை வளாகம்,
கீழவீதி, தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30	00	60	00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.